Regd:No. M. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (22-1-1949) விலை 1 அணு [குண்டு 16

கடவுள் ஒரு நாஸ்திகர் !

(வை. இளமுருகன்.)

எது எலும்புக்கூடு ?

உங்கள் கண்களுக்குக் காக்ஷி தருவதென்னவோ உண்மைதான். மாய்ந்து மடிந்துபோன "சமஸ்கிருத" மங்கையின் எலும்புக் கூடுதான். அதுவும் கம்பியால் இழுத்திழுத்துக் கோர்த்துக் கட்டியிருக்கும் எலும்புக் கூடுதான். ஆனல் நீங்கள் அவ்விதம் நினைக்கப்படாது. அழகுள்ள மங்கை, கன்னிப்பெண்ணெனவே நினைத்தாக வேண்டும். "சமஸ்கிருதம்" அழிந்திருந்தால் இந்தியாவானது எப்படி அழியாமலிருக்க முடியும், கபர்தார் ; தெரியுமா ! பாடுங்கள் ஜன கண மண

(காசியில் 11-1-49ல் தோழர் கோவிந்த வல்லபந்த் ஆற்றிய சொற்பொழிவை யொட்டி)

"எவன் புகழையும் சிற்றின்பத்தையும், பணத்தையும் மனதில் எண்ணிக் கொண்டு உருவ வழிபாடு செய்கிருனே அவன் வெறியன். அதாவது ராட்சஸ குணம் உள்ளவன்."

"நான் எப்போதும் எல்லா உயிர்களின் உள்ளங்களிலும் இருக்கின்றேன். நான் ஏதோ ஒரு இடத்தில் இருப்பதாகக் கூறிக்கொண்டு இந்த மனிதன் உருவ வழிபாடு என்ற பைத்தியக்காரத்தனமான அல்லது பரிகசிக்கத் தகுந்த காரியத்தைச் செய்கிருன்"

"எல்லா உயிர்களுக்கும் ஆண்டானை எல்லார் உள்ளங்களிலும் இருக்கின்ற என்னைத் தள்ளிவிட்டு ஒரு உருவத்தின் முன் நின்று கொண்டு முட்டாள் தன்மையுடன் எவன் வணங்குகிருனே அவன் பிற உயிர்களை வெறுப்பவனுகிருன். அவன் மனது அமைதி அடையாது."

"என்னை ஒரு உருவத்தில் வணங்குவதைக் கண்டு நான் திருப்தி அடைய மாட்டேன். எல்லாருடைய உள்ளங்களிலும் கோயில் கொண்டுள்ளவனை என்னை வணங்குங்கள்."

இந்த வார்த்தைகள் "கபில அவதார" காலத்தில் கபிலராக அவதரித்த மகாவிஷ்ணு கூறியதாக "ஸ்ரீ மத் பாகவதம்" என்ற ஆரிய இதிஹாச நூலில் காணப்படுகிறது. கபிலர் தன் தாயாருக்கு ஞானமார்க்கத்தைப் போதிக்கும்போது கூறியதாக அதில் எழுதப்பட்டிருக்கிறது. (புத்தக மூலம் ஆங்கில மொழி பெயர்ப்பு பிரதியை சென்னை ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனியார் வெளியிட்டிருக்கிருர்கள்.)

ஒரு தடவை அல்ல; பன்முறை படித்துப் பாருங்கள். உருவ வழி பாட்டிலுள்ள அபத்தங்களை ஒரு ஈ. வெ. ராமசாமி கண்டித்தால் "நாஸ்திகன்" என்று சற்றும் நாக்கூசாது திட்டும் தோழர்கள் சற்றும் ஆத்திரப்படாமல் அறிவுடன் சிந்தியுங்கள்.

வெறியன், பைத்தியக்காரத்தனம, முட்டாள் தன்மை.

இவை எத்தகைய குற்றச்சாட்டுகள் குழவிக்கல்லை கோவிலில் வைத்து? அதற்கு பாலாபிஷேகம், தேனபிஷேகம், பஞ்சாமிர்தாபிஷேகம் செய்து அதற்கு ஒரு கூத்தியாளை ஏற்படுத்தி, வருடந்தோறும் கலியாணம் செய்து, தினந்தோறும் இரவில் பள்ளி அறையில் மனையாளுடன் படுக்கச் செய்து தினசரி ஆறுவேளை சோறுபடைத்து அனுவசியமாக பணத்தை வீணுக்கும் அயோக்கியத்தனத்தை. ; செய்பவனை ஒரு பெரியார் இராமசாமி கண்டித்தால் உடனே 'நாஸ்திகன், பிராமணத் துவேஷி' என்றுநாக்கில் நரம்பின்றித் தூஷிக்க இந்த நாட்டு முட்டாள்களுக்கும் மூடபக்தி செய்யும் சீடர்களுக்கும் மனம் வரும். இப்போது எம்பிரான் நாராயணன் திருவாக்கைக் கேட்ட பின்னராவது சித்தம் தெளியட்டும். பகவானின் லீலைகள் அடங்கிய "பாகவதத்தையே" தங்கள் வேதமாக, ஆசாரமாக, அனுஷ்டானமாக வைத்திருக்கும் பரம பக்தர்களே, உங்கள் நாராயணன் — மகாவிஷ்ணு — கபிலர் அவதார காலத்தில் இப்படிக் கூறியிருக்கிருரே! அப்படி இருக்கும் போது என் குழவிக்கல்லைக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறீர்கள்? என்று ஈ. வெ. ரா. கூறினல் நாஸ்திகப் பேச்சு. அண்ணுத்துரை கூறினல் துவேஷப் பிரசாரம். ஆனல் திருமால் கூறினல் அதற்கு என்ன பெயர்? திருமாலும் நாஸ்திகரா? அவரும் சுயமரியாதைக்காரரா? ஈரோட்டுப் பாதையில் செல்கிறவரா? அல்லது பாகவதத்தை சுயமரியாதைக்காரர்கள் எழுதி வைத்திருக்கிருர்களா? அந்த சமஸ்கிருத மொழியைக் காதால் கேட்டாலும் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று அல்லவா சுயநல ஆரியக் கும்பலின் வேதத்தில் இருக்கிறது! 'பார்ப்பானை அய்யர் என்ற காலமும் போச்சே" என்ற பாரதியாரின் புரட்சிப் பாட்டை இசைத் தட்டிலே-ஏட்டிலே-வானெலியிலே கேட்காதவாறு அடியோடு மறைத்துவிட்ட ஆரிய அநாகரிக முறை சுயமரியாதைக்காரர்களுக்குத் தெரியுமா? தங்கள் கருத்தை வடமொழியிலே எழுதி பாகவதத்திலே புகுத்தி இருக்கிருர்களா? ஜி. ஏ. நடேசன் கம்பெனி வெளியிட்ட புத்தகம் டாக்டர் வி. ராகவன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த புத்தகம் இதில் ஆரியரின் அயோக்கியதனத்தைப் பின்

(2-ம் பக்கம் பார்க்க)

கோட்ஸே பேசுகிறார்

[" அறிவழகன் "]

கோட்ஸே பேசுகிறார். ஆம்! நான் பேசிதான் தீர வேண்டும். உள்ளக் கிடக்கையை ஊருக்கு எடுத்தியம்பத்தான் வேண்டும். உண்மையறியாத ஒரு சில உளறுவாயறுகளுக்காக சொல்லித்தான் தீரவேண்டும். கோட்டை கட்டுவதாக கேள்விகள் பல எழுப்பிதிரியும் கேடு மதியாளர்களுக்காக பேசத்தான் வேண்டும்.

கேளுங்கள், தீரர்களே! நான் தற்போது கூறப்போவது தங்களுக்காக பயந்தல்ல; பரிதாபப்பட்டு, மக்களுக்காக மதிமொழி கூறவந்த மகாத்மாவுக்கு மாபாவி தந்த பரிசு மூன்று குண்டுகள். அறிவுபுகட்ட வந்த அண்ணல் காந்திக்கு அயோக்கியன் ஈந்த பதில்மூன்று தோட்டாக்கள். ஆம்! இப்படித்தான் வசை புராணம் வாசித்திருப்பீர்கள்.

உண்மையறியாத உலுத்தர்களே! எங்கள் பரம்பரையை புரட்டிப் பாருங்கள். எங்களிடம் வீரத்தை காணமுடியாது. வீரர்களல்ல நாங்கள். ஆனால் உங்களைபோல வீணர்களல்ல. காரியம் சாதிக்க கடுகளவு வியர்வையை கூட வீணாக்கியதில்லை. வீம்புக்காக பேசுகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். இது வெறும் புரட்டு; புனை சுருட்டு என்று ஏமாந்துவிடாதீர்கள். இதற்கெல்லாம் சரித்திர வரலாறு இருக்கிறது. இறந்த கால நிகழ்ச்சிகள்தான். ஆனால் நிகழ் காலத்தில் நான் கூறுவது உங்களுக்கு அதிசயமாகத்தான் இருக்கும். மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள், மமதையாளர்களே! மறுபடியும் கூறுகிறேன் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

அநீதிகாரர்கள் அந்தணர்கள் என அடுக்கு மொழியிலே அழகாக பேசுகிறீர்களே ஒழிய, அறவோர்கள் என எங்களை கூற மறுப்பாறுண்டோ? கூற மறுப்பினும் குவலயத்தில் அவர்களின் கதியென்னவென்பதைசிந்தித்தீர்களா?

மன்ன மன்னவனே! கனகவிசயனிடம் வெற்றி கண்டாய். கயவனுக்கு கல்லறையும் கட்டினாய். நன்று. நன்று. ஆனால் கொலைபாதகம் செய்து விட்டாய். ஆகையால் பரமனை நாடு என பக்குவமாய் பகன்ரோம். வீழ்ந்தான் எங்கள் வலையிலே சேரன் செங்குட்டுவன். வேண்டிய மட்டும் பயன்படுத்தி கொண்டு வீழ்த்தினோம் வீரனை. அறிந்து கொள்ளுங்கள், ஆணவக்காரர்களே! ஆரியத்தை அழித்துவிடுவதாக ஆர்பரிக்கிறீர்களே, அன்றும் ஓர் விதண்டாவாதக்காரன் வில்லவன் இருந்தான் கேட்டானா சேரன்? கெடுமதியாளர்களே கேட்ட கேள்விக்கு பதிலிருக்கிறதா?

அலெக்ஸாண்டரிடம், தஞ்சம் அய்யனே! என்றோம் தங்கள் புகழ் திக்கெட்டும் பரவ திட்டமிதோ என போர் மூட்டினோம். மாண்டொழிந்தான் மேதாவி மெஸிகா. ஆம்! சிந்து மன்னன்தான். விரும்பியதை வழங்கியிருந்தால் வந்திருக்குமா இவ்வம்புகளெல்லாம்? பகருங்கள் பகுத்தறிவாளர்களின் பட்டயக்காரர்களே?

சிறைவாசம் இன்று எங்களுக்கு புதிதல்ல. புத்த மதத்தை எதிர்த்தோம். சிறையிலடைத்தான் ஹர்ஷன். முடிவிலே கங்கரபட்டர் தோன்றினார். தோல்விகண்டது புத்தமதம். விரட்டினோம் சைனா, ஜப்பான், பர்மாவை நோக்கி. இங்கே பிறந்த மதத்துக்கு ஏன் வாழவழியற்று போய் விட்டது? உண்மையறிவீர்களா உன்மத்தர்களே! வீணர்களின் காலில் வீழ்வதா? என்றான் சிவாஜி. சூத்திரன் நீ! பட்டத்துக்கு தகுதியல்ல என்றோம். பதட்டம் மிகக் கொண்டான். சாத்திரங்களை சாடினோம். சரணடைந்தான் சண்டாளன் சிவாஜி. ஈரோட்டு பாசறையின் இருட்டு ஒளிகளே! இருக்கிறதா பதில்.

அமீத் சந்த் என்பார் எங்கள் வழி வந்தோர் இருந்திராவிட்டால் ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் அடி எடுத்து வைத்திருக்க முடியுமா? பீரங்கியின் பித்தர்களே பதில் எங்கே?

வெள்ளையனை வெளியேற்ற விரும்பினோம். வெறும் காந்தியை மகாத்மா வாக்கினோம். வெள்ளையனையும் விரட்டினோம். மதவெறியால் மகாத்மாவை மாண்டொழித்தோம். நீங்கள் கண்ணீர் வடித்தீர்கள். இரத்த கண்ணீர் சொரிய வேண்டிய நாங்கள், அதற்கு பதில் இனிப்பு பதார்த்தங்கள் வழங்கினோம். இன உணர்வற்ற ஈனர்களே! பார்த்தீர்களா எங்கள் பரம்பரையை'

சரித வரலாறுகள் இருக்கட்டும். சாத்திரங்களை புரட்டுங்கள். சான்றுகள் பல கிடைக்கும்.

ஏகலைவா! என்றோம். வேண்டுவன யாது என்றான். பெருமையோடு கொடுத்தான் பெருவிரலை. பெற்றோம் காணிக்கையாக. வீழ்த்தினோம் வில் விசயனை. வாய் பேச்சு வம்பர்களே! வழங்குவீரா இதற்கும் பதில்.

மூன்று அடி மண்யாசித்து வேந்தனை வீழ்த்தியது எங்கள் பரம்பரைதானே? மமதை மிகுந்த மடையர்களே! மறுப்புண்டோ? இதற்கும்.

கர்ணனின் உயிரை மாய்க்க எங்களால் தானே முடிந்தது? காணுவீரா, கண்டன பேச்சாளர்களே! கருத்தழிந்து கயவராகி விடாதீர்கள்-

இராமாயண காலத்திலே எங்களுக்கு பயன்பட்டவன் ஓர் விபீஷணன் தானே? வீணர்களே! உணர்வீரா, இன்றும் ஈரோட்டு ராமசாமியை கெடுக்க ஓர் ஓமந்தூர் ராமசாமியிருப்பதை போல.

இரணியனைத் தொலைக்க ஓர்பிரகலாதன் கிட்டினான்; உங்கள் அண்ணாதுரையை ஒழிக்க ஓர் அவினாசியிருப்பதை போல.

மண்டோதரியின் மாண்பைப் பற்றி மண்டலமெல்லாம் முழக்கினீர்கள். மறந்தனரா சீதையின் சிறப்பை! சகோதரதத்துவத்துக்கு பரதனையும், இராமனையும் காட்டினோம் சான்றாக. இல்லை என்று மறுத்தீர்கள். சிலப்பதிகாரம் வந்த வரலாறே சகோதர வாஞ்சைக்கு சான்று என்கிறீர்கள். எற்றதா இவ்வுலகம்? முடிவில் ஏமாற்றம் அடைந்தீரே, மானமிருக்கிறதா? அகலிகையின் வரலாறுகளை அடுக்கடுக்காக எடுத்து ஓதிக் கொண்டிருந்தோம். மறுத்தீர்கள். கற்புக்கரசியாம் கண்ணகி என்று கண்டனம் வீசினீர்கள் வீழ்ந்ததுயார்? உண்மை யறிவீரா? உங்கள் வார்த்தைக்கு கடுகளவும் மரியாதை யுண்டா? மாண்டொழிவதற்குள் மறுமலர்ச்சி யடைந்துவிடுங்கள். வேண்டாம் இந்த வீண் வாதுகளெல்லாம்! அன்றும் கம்பகாதைக்கு கருத்துக்கள் தீட்டியது ஓர் கூலிக்கார கம்பன் தான். இன்றும் கதைக்கு மெருகு கொடுக்க ஒரு T. K. சிதம்பரம்பிள்ளை தான்; புதுவைக்கு ஓர் நாமக்கல் கவியிருப்பதைப்போல.

சிறையில் அவதியுற்றனர் உங்கள் பெண்டீர்கள், சென்ற இந்தி எதிர்ப்பிலே. ஆம் 1938-ல் தான். அப்போதும் கூறினோம் வாழ வழியற்றவர்கள் இவர்கள் என்று கம்பீரமாகத்தான் பதிலளித்தோம். சோம்பேறி வாழ்க்கை நடத்தச் சென்ற உங்கள் பெண்களுக்கு தியாகப் பெண்டீர்கள் என்ரு பெயர்? முடியவே முடியாது என்றுதான் அன்றும் விதண்டாவாதம் செய்தீர்கள். வீழ்ந்ததா வீணர்கள் காதில்!

ஈரோட்டு வள்ளலின் எடை குறைகிறதே என்று கேள்விகள் எழுப்பினீர்கள். அப்போதும் கூறினோம் மனிதனுக்கு இருக்கவேண்டிய எடை இவ்வளவுதான் என்று விட்டீர்களா அப்போதும் எங்களை, பாஷ்யமய்யங்கார் பட்ட பிரம்படிக்கு சட்டசபையில் சரமாரியான கேள்வியா? என கேட்டுத்திரிந்தீர்கள். அலட்சியப்படுத்தி விட்டோம், அறிவீரா அறிவீனர்களே! ஆகஸ்டு துரோகி என்றுதான் தூற்றினீர்கள். அதற்கும் ஏதாகிலும் கலங்கினோமா? மீனம்பாக்கத்தில் விரட்டியடித்தோம். காங்கிரஸிலே மெம்பருக்கும் லாயக்கற்றவர்கள் என்றுதான் கூறினீர்கள். இன்று கவர்னர் ஜெனரல் நாங்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் அரசியலை நடத்த அறிவேது என்றீர்கள், அரசியல் நிர்ணயசபை அக்கிரகாரம் இன்று. அறிந்துக் கொள்ளுங்கள் ஆணவக்காரர்களே! நீங்களும் அழிந்துபடாதீர்கள்.

1945ல் நடந்த வங்க பிரிவினையின் காரணத்தால் ஏற்பட்ட ஓர் பயங்கர இயக்கத்தில் பங்கு கொண்டவர்தான் எங்கள் நிர்வாக பொறுப்பாளர். ஆம்! அது, ஹெட்ஜாவர் என்னும் நீங்கள் கூறும் குல்லுகபட்டர் வழிவந்தவர்தான். வெற்றிகண்ட வெஞ்சமர்களுக்கு வீர பரிசுகள் வழங்கியவர்தான் எங்கள் எம். எ. காட்டேன் மறுப்போமில்லை. நீங்கள் மட்டும் அறிவீர்களா? மண்டலமெங்கும் நன்கறியும் அறிந்தும் ஆவன செய்ததுண்டா இனி யாவது செய்வீர்களா? செய்ய நெஞ்சம் துணிவு கொள்ளுமா?

நெஞ்சம் துணிவு கொண்டவர்கள் தான் என்ன கண்டு விட்டனர் தமிழா! என்கிறீர்கள். இல்லை இந்தியன் என்றான். அறியாமையின் விளைவு! என்றீர்கள். ஆங்கிலேயன் கால்வருடி நீ! என்றான. கூட்டைவிட்டு வெளியே வா! என்றீகள். நாத்திக பதரே என்றான். இதை தவிர வேறு கண்டதுண்டோ? கபோதிகளே! காணுவீரா கருத்துள்ள பதில் ஏதும்]

நாங்கள் அவர்களை என் செய்தோம்? கேளுங்கள், நாங்கள் அவற்றிற்கும் பதிலிருக்கிறோம். தேசியம் எனும் சிறைபடுத்தி, அறியாமையெனும் விலங்கிட்டோம். இன்னும் அவர்களுக்கு புத்தம் புதிய இரண்டு கண்களை ஈந்தோம். ஒன்று எல்லாம் அவன் செயல். மற்றொன்று விதியின் விளைவு. செய்த கைம்மாறு அவர்களுக்த இதுதான். வேறு ஒன்றுமில்லை. தெரிந்து கொள்ளுங்கள், திண்ணை தூங்கிகளே! இனியும் திட்டமேதாகிலும் உண்டோ உங்களிடம். இருப்பின் அதையும் செய்து பாருங்கள்.

கேடு கெட்டலையும் மாந்தர்காள்! கேளுங்கள். நன்றாக கேளுங்கள். நான் பேசியதை கவனமாக கேளுங்கள். நான் கூறியவற்றை அறிவை கொண்டு அலசி ஆராய்ந்து பாருங்கள். கேட்டுவிட்டு நீங்களெல்லாம் என்ன செய்ய போகிறீர்கள்? ஆம்! எனக்கு புதிய வழி ஒன்று தோன்றுகிறது. மான முள்ளவன் செய்து கொள்ளும் வழி. இன உணர்வுக்காரன் செய்து கொள்ள வேண்டிய வழி. பகுத்தறிவாளர்கள் பின் பற்ற வேண்டிய வழி. அதுதான் தற்கொலை! ஆம்! தற்கொலை செய்து கொள்ளுங்கள். தற்கொலை! தற்கொலை! மறந்துவிடாதீர்கள்.

(குறிப்பு) :—இது கற்பனைதான். தமிழ்நாட்டிலே, கோட்ஸேவை மேடை பிரசங்கம் செய்யசொன்னால் இதுமாதிரிதான் பேசியிருக்கமுடியும். ஆகவே, அவர் வருகைக்குமுன் எமது கற்பனை இது.

பஸ் கட்டணங்களைத் திருத்த உத்தேசம்

நகரில் பஸ் கட்டணத்தை அதிகப் பக்ஷமாக 4 அணுவாக நிர்ணயிக்க சர்க்கார் உத்தேசிப்பதாகத் தெரிகிறது. இத்துடன் சில மார்க்கங்களில் கட்டணங்களை மாற்றி நிர்ணயித்தால், பஸ் கட்டண உயர்வு பற்றிய குறைகள் நீங்கும் என்று நம்பப்படுகிறது. இது விஷயமாய் சர்க்கார் சீக்கிரம் உத்தரவு பிறப்பிப்பர் என்று தெரிகிறது.

(முதல் பக்கம் தொடர்ச்சி)

பற்றி பகவான் சொன்னார் என்று தங்கள் சுயமரியாதைக் கருத்துக்களை-சுயமரியாதைக்காரர்கள் புகுத்தியிருக்க முடியுமா? என்பதைச்சற்று சிந்தித்துப் பாருங்கள்.

திருவள்ளுவர் மொழிந்த செம்மையான நேர்மையான குறள் மணிகளுக்கு வட நூலார் மதம் பற்றி உரை வகுத்த பரிமேலழகர் போன்றவரின் ஆரிய அநாகரீக முறை சுயமரியாதைக் காரர்களுக்குத் தெரியுமா?

பகவான் கூறியிருக்கிறார் உருவ வழிபாடு பைத்தியக்காரத்தனம் என்று.

"அஹம் சர்வ பூதேஷுஷீபூ தாத்மா
அவஸ்தித : சதா
தம் அவக்ஞாய மாம் மார்த்ய : இரு
தே அர்சிவிடம்பனம்"

இதன் பொருள் : "நான் எல்லா உயிர்களிலும் இருக்கிறேன். எப்போதும் அவர்களிடம் இருக்கிறேன். இதை அறிந்து கொள்ளாத மனிதன் பைத்தியக்கார, அல்லது பரிகசிக்கத்தக்க உருவ வழிபாட்டைச் செய்கிறான்."

"அஹம் நைவ துஷ்யே அர்சித :
அர்ச்சாயாம்"

இதன் பொருள் : என்னை ஒரு உருவத்தில் வழிபடுவதால் நான் சந்தோஷம் அடைவதில்லை."

"அர்சாம் பஜதே மௌட்யாத்"

இதன் பொருள் : மூடத்தனத்தால் (முட்டாள்தனத்தால்) ஒரு உருவத்தை மனிதன்பஜிக்கிறான்.(வணங்குகிறான்.)

இப்பொழுது புரிகிறதா? கடவுள் எத்தகைய நாஸ்திகர் என்று. என் சுயமரியாதைக்காரர்களையும் ஈ. வெ. ராவையும் அப்படியே (ஆரியர்கள் பக்த சிகாமணிகள் எதிர்ப்பது போல) விழுங்கி விடாமல் (நரசிம்மாவதாரம் செய்யாமல்) இருந்த இடம் தெரியாமல் கடவுள் இருக்கிறார் என்பது இப்பொழுது விளங்குகிறதா? வடமொழியை மக்களில் ஒரு சாராரே படிக்க வேண்டும், வியாக்கியானம் செய்ய வேண்டும் என்று ஆரியர்கள் கூறுவதின் அர்த்தம் இப்போது தெளிவாகயிருக்கும் என்று நம்புகிறேன். எங்கு சுயமரியாதைக்காரர்கள் புராதன நூல்களைப் படித்துவிட்டு அதில் உள்ள மேலே கூறியது போன்ற உண்மைகளை எடுத்துக் கூறிவிட்டால் நம் பிழைப்பு என்ன ஆவது? என்று அஞ்சியன்றோ "சூத்திரனும் பெண்ணும் சம்ஸ்கிருதம் படிக்கக்கூடாது" என்று வேத ஸ்மிருதிகளில் எழுதி வைத்துக கொண்டிருக்கிறார்கள்?

பக்த சிரோமணிகளே! உங்கள் கடவுள் - பரந்தாமன் - ஆபத்ரக்ஷகன் - மகா விஷ்ணுவே இப்படி நாஸ்திக பிரசாரம் செய்திருக்கும் போது நீங்களும் ஏன் ஈ. வெ. ராவின் நாஸ்திகக் கட்சியில் சேர்ந்து விடக்கூடாது? இன்னும் ஏன் தயக்கம்?

தீ பரவட்டும்!

— தி. வ. அண்ணாமலை —

"தீ பரவட்டும்! திக்கெட்டும்! இராமாயணம் பெரியபுராணம் போன்ற கலைக்குதவாத கற்பனைக் குப்பைகள் உள்ள இடமெல்லாம் பரவட்டும். ஆம்; இதுபோல் அன்று அண்ணா தீப்பொறி பறக்க தமிழகமெங்கும் சூறாவளியென சுழன்று சுழன்று சொல்லம்பு வீசினர். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னமையே இலக்கியச் சிறப்புற்ற இன்பத் தமிழ்க் கலையை கொலை செய்கிறது ஆரியக் கலை. எனவே தன்மானத் தமிழர் முத்தமிழை சங்கத் தொட்டிலிலிட்டு வளர்த்த மூவேந்தன் பரம்பரையினர் இனியும் பொறா' தீயிட்டுப் பொசுக்குவோம் கம்பன் காவியத்தையும் சேக்கிழார் புராணத்தையும் என்று கனல் கக்கினார் தனக்கே உரித்தான அழகு நடை தனித் தமிழில். அன்று அண்ணா இட்டதீ ஆரியத்தை புராணக் குப்பைகளை விட்டு இன்னும் அகலவில்லை.

ஆனால் நாம் இன்று தீயிடப்போவது ஆரியக் கலைக்களுக்கல்ல. அதைவிட கொடியதான ஆரியபத்திரிகைகளுக்கும் அவற்றின் அடிதாங்கி ஆதித்த சொக்கலிங்க எடுகளுக்குமே யாகும். பத்திரிகைகள் என்றா குறிப்பிட்டேன். தவறு! நச்சரவங்கள் நடமாடும் விடஎடுகள் என்று சொள்ளுங்கள்.

எங்கோகிடந்தவர்கள்; உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி வந்தவர்கள் வளமிக்க திராவிடத்திலே 'தானம்' கேட்க வந்தவர்கள். அபயம் என்று அவக்குரல் கேட்டு ஆதரவு தந்தனர் தமிழர்: அவ்வளவுதான்! அண்டவந்த ஆரியப் பிசாசுகள் எழில்மிக்க நாட்டில் எய்த்தும் பிழைக்க ஆரம்பித்துவிட்டன. இதிகாச வேத புராண சாத்திரக் குப்பைகளையும், கடவுள் மதம் பாவம் புண்ணியம் நரகம் மோட்சம் என்பன போன்ற எழுத்துக் கூட்டங்களையும் எற்படுத்திக் கொண்டு அவற்றிற்கு மகிமைகள் இருப்பதாகக் கூறி மக்களை மாக்களாக்கியதும்மின்றி பாராளும் மன்றத்திலிருந்து பத்திரிகையுலகுவரை நாட்டைக் காட்டி கொடுத்தும் மேனைமினுக்கிகளை கூட்டிக் கொடுத்தும் தன்வயப் படுத்தியதல்லாமல் பார்ப்பனனுக்கு பணி செய்துகிடப்பதே சூத்திரன் (திராவிடன்) தொழில் என மனுஸ் மிருதியென்றும் ஆரிய அநீதி நூலில் எழுதி வைத்துக் கொண்டதுமல்லாமல் அதனையே இன்று நம்மையாளும் (Hindu Law) 'இந்து சட்டத்திலும் புகுத்தி நாட்டுக்குறிய மக்களை நாடோடிகளென நடத்துகின்றனர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற தமிழ்ப்பண்பாட்டை சிதைத்து ஆயிரமாயிரம் கடவுள்களையும், சாதிகளையும் எற்படுத்திவிட்டனர்.

தழைத்திருந்த தமிழ்ச் சோலையிலே புகுந்து ஆரியப் புல்லுருவிகள் விளைத்துவரும் கேட்டினை உணர்ந்து. தன்மானத் தந்தை பெரியார் சோலையின் சாந்தக்காரனிடத்தில் சென்று. தட்டிக் எழுப்பி தகாத செயல் புரிகிறது ஆரியம். உடனே விழித்தெழு! வீறுகொள்! வீழ்த்து வீணர்களை. என வீரவுரை ஆற்றி வருகிறார். வெண்தாடி வீரரின் வீரவுரை கேட்டு வீழ்ச்சியுற்றிருந்த தமிழகம் எழுச்சியுற்றது. விசையொடிந்த தேகத்தில் வன்மையேற்றியது. பொங்குந் தமிழர்க்கின்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கநாதம் புரிந்தது. அது கண்டு ஆரியம் ஆட்டங் கொண்டுவிட்டதே நம் புராணக் கோட்டைகள். என்று அலறிப் புடைக்கிறது. மவுண்ட்ரோடுமண்டுகேத்தினிடம் முறையமிட்டது; ஆட்சி பீடத்தை ஆட்டியது. ஆட்டங்கண்டு விடாமலிருக்க ஆட்சி பீடம் ஆரியத்திற்கு அடிபணிந்து அனுமார் விபீடராய் வேலை செய்ய முனைந்துவிட்டது. தன் இனத்தையே காட்டிக் கொடுக்க ஆரம்பித்து விட்டது ஓமந்தூரார் மந்திரி சபை. வெட்கக் கேடு! ஆளவந்தார்களின் அடக்கு முறை ஈட்டிகள் "போர்வாள்" "சர்வாதிகாரி" "இரணியன்" ஆகிய நாடகங்களின் மீதும் இனத்துரோகி கம்பன் காவியத்திற்கு மறுப்பாக எழுதிய இராவண காவியத்தின் மீதும், வீழ்ச்சியுள்ள திராவிடத்தை வீறு கொள்ளச் செய்து விடுதலை வேட்கை யூட்டி வந்த-வரும் "விடுதலை"யின் மீதும். இன இழிவைக் காட்டி கொள்ள ஒரு சின்னமாக அடையாளமாக அணிந்திருந்த கருப்புச் சட்டைகள் மீதும், பொலிவுற்றிருந்த திராவிடம் நலிவுற்றதற்குரிய காரணங்களை நிரல் நிரலே எடுத்துக் காட்டிடும் பெரியார் பேருரை மீதும் பாய்ந்தன! பாய்ந்த அக்கணமே மாவீரர் பெரியாரின் அமைதி கட்டுப்பாடு. ஒழுங்கு, நீதி, நேர்மை, என்னும் கேடயத்தின் மீது மோதுண்டு கூர் மழுங்கி விழுந்தன. அங்கிங் கேளாதபடி 144 களை எங்கும் வீசினர். குடந்தையில் குருதி கொட்டி வெற்றி மாலை சூடினர் வீரத் திராவிடர்கள். எத்தகைய பாணங்களை தொடுத்தும் படு சூரணமாக்குவது கண்டு பதை பதைக்கிறது பார்ப்பனீயம். எந்த அடக்கு முறையாலும் இனி அழிக்க முடியாது ஈரோட்டு உணர்ச்சியை என்று உணர்ந்து மொழியை அழித்தாலன்றி இனிதாம் வாழ முடியாதென்பதை தெற்றெனத் தெரிந்து வடநாட்டு இந்தியென்னும் எருமையை அழைத்து தமிழ்ச் சோலையிலே மேயவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர் பார்ப்பனர்கள். ஆனால் தமிழர்களோ, "பங்கம் விளைந்திடில் தாய் மொழிக்கே உடல் பச்சை ரத்தம் பறிமாறிடத் தயங்கோம் என்று சூளுரைத்துவிட்டனர். அதற்கான அறப்போர் சென்னையில் அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது, பேச்சுரிமை கூடாதென கூட்டங்களுக்கெல்லாம் 144! இந்தியை என் வேண்டாமென்று நாம் கூறுகிறோம் என்பதற்குரிய காரணங்களை மக்களுக்கு எடுத்து சொல்ல வேண்டிய அவசியம்எற்படுகிறகாரணத்தால் தடை யுத்தரவை மீறுவதென கமிட்டி தீர்மானித்து குடந்தையில் அதனை செயலில் காட்டியது. அறப்போர் நடத்தும் வீரர்களை குடந்தை மண்ணில் செங்குருதி கொட்ட, கொட்டரமண பக்தரின் இலாக்காவினர் அடித்து நொருக்கினர். மண்டையுடைந்தது சிலருக்கு, எலும்பு முறிந்தது சிலருக்கு படுகாயம் உற்றனர் சிலர். தமிழ் "வாழ்க!" என்றதற்காக தரணியில் விழும்வரையில் நையப் புடைத்து லாரிகளில் எற்றிச் சென்று கண் காணாத இடத்திலே இறக்கினர். இரத்தம் சிந்தி இறுதியில் வெற்றி பெற்றோம். விழா கொண்டாடினோம். இந்த நிகழ்ச்சியைப் பற்றி இம்மாகாண பார்ப்பனப் பத்திரிகைகள் ஒரு வரியேனும் உண்மை நிகழ்ச்சியை வெளியிட்டதா? செங்குருதி சிந்தியும் கலங்கா உள்ளம் படைத்த தோழர்களை "மன்னிப்பு கேட்டுக் கொண்டனர்" என்று எழுதின். தடியடிக்கும் தளராத நெஞ்சுரம் கொண்ட தோழர்களை "ஓட்டமெடுத்தனர் தடியடி கண்டு" என்று எழுதின. பட்டேலிச வெறியர்களால் பத்தாம் முறையாக சிறைக் கம்பிகளுக்கிடையே தள்ளப்பட்ட தமிழர் தலைவரைப் பற்றி ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமி என்பவர் கைதானார்" என்று எழுதின. இப்படியே நம் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் உண்மைக்கு மாறாக மறைத்தும் திரித்தும். கேலி செய்தும், கிண்டல் பண்ணியும் எழுதும் அளவிற்கு ஆரிய எடுகளுக்கு அச்சம் நீங்கி, நெஞ்சில் உரம் எறியிருக்கிறதென்றால் அது திராவிடத்தில் சுரண்டித் தின்று கொழுத்ததால் அல்லவா? இத்தகைய அக்ரமம் புரியும் ஆரிய பத்திரிகைகளையும், அவைகளுக்கு தாளம் தட்டும் தறுதலை பத்திரிகைகளையும் தீயிட்டுப் பொசுக்க வேண்டாமா திராவிடராய்ப் பிறந்த ஒவ்வொருவனும் என்பதே இன்றைய திராவிடத்தின் இதயத்தில் எழும்வினா? வினாவிற்கு விடையிறுப்பது வீரத் திராவிடர்களின் நீங்கா கடமை.

திராவிடத் தோழர்களே! இனியுமா விட்டு வைப்பது கோட்சே செயல் புரியும் குள்ள நரிப் பத்திரிகைகளை ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு பொது இடங்களிலும் தீயிட்டுப் பொசுக்குங்கள் பார்ப்பனியப் பத்திரிகைகளை! தீப்பற்றி எரியும்போது அவைகள் செய்த செய்யும் தீங்குகளை எடுத்துரையுங்கள்! நாம் இடும் இந்த தீ ஆரியத்திற்கு இறுதிச் சடங்காகட்டும்!

திராவிடப் பொது மக்களே! உங்கட்கும் ஒரு வேண்டுகோள்! அலக்சாண்டர் கால முதல் ஆங்கிலேயர் காலம் வரை நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் ஆரியர்கள் ஓர்திருத்த சித்தர்கள் முதல் காந்தியார்வரை கொன்று குவித்தவர்கள் ஆரியர்கள் ஈராயிரம் ஆண்டுகளாக நம்மை கடவுளின் பேராலும் சாத்திர சம்பிரதாயங்களின் பேராலும் சுரண்டி உல்லாச வாழ்வு வாழ்பவர்கள் ஆரியர்கள். பாராளும் மன்றத்திலிருந்து பத்திரிகையுலகுவரையில் நிறைந்திருப்பவர்கள் ஆரியர்கள். கலியாணம் முதல் கருமாதிவரையில் வந்து சுரண்டிச் செல்பவன் ஆரியன். இவைகளை உணர்ந்தாவது உல்லாசபுரியிலே உலவும் அந்த உலுத்த கூட்டத்திற்கு ஒரு முற்றுப் புள்ளியிட வேண்டாமா? வேண்டும் என்றுதானே பதில் வரும்-வரமுடியும். சொல்லினால் அல்ல. செயலிலே காட்டுங்கள் தமிழகம் தழைக்க தமிழர்கள் தலை நிமிர்ந்து நடக்க. இதுவே நீங்கள் நாட்டுக்கு செய்யும் நற்பணியாகும்.

வாகழ் திராவிடம்! வீழ்க ஆரியம்!

நன்றாகச் சிரியுங்கள்

"தூத்துக்குடி வாலி"

ஆம்! நன்றாகச்சிரியுங்கள்; கூக்குரலிட்டுச் சிரியுங்கள், உடல் குலுங்க குலுங்கச் சிரியுங்கள்; வயிர் வலிக்க வலிக்கச் சிரியுங்கள், கீளே விழுந்து விழுந்துச் சிரியுங்கள்; மதி மந்திரிகளே சிரியுங்கள்; மக்களின் மாபெரும் தலைவர்களே சிரியுங்கள் அயல்நாடு சுற்றிய சுடலேறுகளே சிரியுங்கள் சுதந்திர வீரர்களே சிரியுங்கள்! மஞ்சள் பெட்டியின் மாவீரர்களே சிரியுங்கள்; மாவீரனின் உயிரைக் குடித்த இந்து மதத்தலைவர்களே சிரியுங்கள்' அர்த்தராத்திரியில் அறியாசனம் எறிய அய்யன் மார்களே சிரியுங்கள்! சிரிக்கும் உங்களைப்பார்த்து நாடு சிரிக்கட்டும்! நாடு சிரிப்பதைப் பார்த்து இந்த உலகமே சிரிக்கட்டும். சிரிப்புக்கு ஒருதனிப் பெருமை உங்களால் எற்பட்டது என்ற பெருமையாவது எற்படட்டும்.

ஆனால்! சிரிப்பதற்கும் ஒரு அளவு. காரண காரியம் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். எதற்குச்சிரிப்பது எதற்கு அழுவது என்பதை நாட்டுப்புறவாசிகள்கூட அறிவதை, நாட்டை ஆளும் மந்திரிகள் அறியவில்லையே என்பதை நான்நினைத்து, சிரிப்பதா! அழுவதா என்பதே விளங்கவில்லை. சிரிப்பதற்கு நான் என்ன கழுதையை நிறுத்தினாலும் ஓட்டுப்போடு என்று கூறும் கபோதி இயக்கத்தைச் சார்ந்தவனா! சிரிப்பதற்கு, மந்திரிகளின் அறியாமைச் சிரிப்பைக்கண்டு வருந்துகிறேன். இந்த வருத்தத்தை யாரிடம் சொல்லி அழுவது என்று திகைக்கவும் செய்கிறேன். சரி என்று செய்வது எவனிடமாவது சொன்னால்தானே மனநிம்மதி அடையும், எனவே உங்களிடமே சொல்லி விடுகிறேன்.

ஒருநாள், சவகர் பட்டேல், பட்டாபி ஆகிய மூன்று பேர்களும், (அதாவது தற்கால மும்மூர்த்திகள்) ஒன்றாக வீற்றிருந்தார்களாம்! சவகர் எண்ணும் பணம் எத்தனை ரூபாய் என்று உங்களுக்குத் தெரியுமாவென்று பட்டாபியைப் பார்த்துக் கேட்டாராம், பட்டாபி நீங்களேதான் சொல்லுங்களேன் என்று நேருவையே கேட்டாராம், நேரு பட்டேலைப் பார்த்தாராம், பட்டேல் மௌனம் சாதித்தாராம், உடன்மூன்று பேர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்களாம், இந்நாட்டுப் பத்திரிக்கைகள் மானமில்லாது—கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருக்கின்றன! அதைப் பார்த்த தேசியத் தோழர்கள் வெட்கமில்லாது சிரிக்கின்றனர், இன்றய நேரு சர்க்காரின் சம்பளத்தைக்கண்டு, இப்படி மக்களின் வரிப்பணத்தை கொள்ளைகொண்டு போகிறார்களே என மக்கள் வயிறெரிந்து கிடக்கும் இந்நாளில், ஓராண்டுக்குமேலாக, தாங்கள் மட்டுமல்லாது, தங்கள், தங்கை, மகன் மகள், பேரன் பேத்தி, யாவரும் கொழுத்த சம்பளத்தை வாங்கி, எப்பமிட்டுவிட்டு, கொழுத்துப்போய் கிடக்கும் வேளையில், தங்கள்சம்பளம் இன்னதென்று தெரியாது, சிரிப்பது, மக்களை ஏமாற்றுவதற்கு நடிக்கும், கபடநாடகமல்லவா சிரிப்பது, அயோக்கியத்தனமல்லவா, இந்த எக்காரமான சிரிப்பு அரசாங்க அலுவல்தார்களின் சம்பளம் கவரில் அடைத்து, தங்கள் மேஜையைத் தேடி அல்லவா வரும், அதுவும் முதன் மந்திரி என்றால், முதலாவதாக, வீடு தேடி அல்லவா ஓடோடிவரும். நேரு ஊரில் இல்லாது அயல்நாடு சென்றிருந்தாலும் நேருவின் பெயரால் பாங்கியில் அல்லவா போடப்படும். அப்படி இருக்க சம்பளம் இவ்வளவு என்று தெரியாத நேரு இந்த பதவிக்கு வந்த சுமார் ஓராண்டுச் சம்பளத்தையும் தன் கையால் வாங்காது, நாட்டுக்காகத் தியாகம் செய்துவிட்டாரா? இல்லை. நேருவிடம் சம்பளத்தைக் கொடுக்காது, அங்கே உள்ள சிப்பந்திகள் எப்பமிட்டு விட்டார்களா? என்ன இதெல்லாம் என்ன? நாடகம் தன் சம்பளத்தைச் சரிவர கணக்குப் பார்த்து வாங்கத்தெரியாத நேரு ஒரு நாட்டின் நிர்வாகத்தை எப்படி எற்று நடத்துவார், நாட்டு மக்களுக்குக் கான திட்டத்தைத்தான் எவ்வாறு தீட்டுவார்? மாற்றானுக்கு இந்த நாட்டை அடகுவைத்து விட்டல்லவா போய் விடுவார், பாவம் அவர்தான் என் செய்வார். அவரால் முடிந்தது அவ்வளவு தான் என்பதை நிர்வாகத்தை சீர்குலையச் செய்ததிலிருந்து நிரூபித்துக் காட்டியபிறகும் மக்கள் விழிப்படையவில்லையென்றால் சிரிக்காமல் வேறு என்ன தான் செய்ய முடியும். சிரியுங்கள்! நேருகளே சிரியுங்கள். மஞ்சள் பெட்டியின் மகத்துவம்மறைவதற்குள் சிரிக்க வேண்டியதெல்லாம் நினைத்து சிரித்து விடுங்கள்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	22-1-49

பொட்டுக் கட்டும் வழக்கம்

இதே பத்திரிகளின் "சிறுவர் புகைபிடித்தல்" என்ற, தலைப் பின்கீழ் பொட்டுக்கட்டும் வழக்கத்தைப்பற்றி துவிக்கியிருந்ததையும், இப்பழக்கத்தை ஒரு சாரார் குலத்தொழிலென்றும், குல லக்ஷணமென்றும் பெருமையாகக் கருதி வந்தார்களென்றும், பெண்ணைப் பெற்ற தாய் தந்தையரும் தாம் ஈன்ற மக்களுக்குப் பொட்டுக்கட்டி "தேவதாசி" என்றுரைக்கப் படுவதை பெரிதும் மகிழ்ச்சிக்கு உரியதென்றும் வாழாதிருந்து வந்தனர் என்பதை எடுத்துக் காட்டியிருந்ததையும் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். மற்றும், பிறகூட்டத்தினரின் சூழ்ச்சியும் சுயநலமும் இப்பழக்கத்தில் கலக்காமலில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம். இதை சற்றேனும் விளக்கவேண்டியது முக்கியமென்றே கருதுகிறோம். பெண்ணுக்குப் பொட்டுக் கட்டியதும் அப்பெண்ணை பெரும் பணக்குவியலென்றேபாதுகாத்து வருவர் பெண்ணைப்பெற்ற தாய் தந்தையரும், மற்றையோரும். எத்தகைய தொழிலுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறாள் என்பதை சற்றேனும் சிந்திப்பதில்லை.

பெண் பக்குவமாகா முன்பே வெள்ளிக் கூஜா விற்கும் வெற்றிலைப் பெட்டிக்கும் அச்சக்காரம் கொடுத்து விடுவார்கள். அக்கரை கொண்ட மற்றுள்ளோர் மைனர்களின் பட்டியலைத் தயாரிக்க ஆரம்பித்து விடுவர். பெண்ணும் பக்குவமாவாள். வீட்டுக்கழைக்கும் போது பட்டியலில் கண்டுள்ள நபர்கள் யாவருக்கும் தவறாது அழைப்புப் போய்ச் சேரும். அன்றிருந்து மைனர்கள் அவ்வீட்டையும் அங்குள்ள தாய்க்காரியையும் சுற்றி சுற்றி வரவேற்படுவர் ஒரு காலத்தில் கூழுக்குக் காத்துக் கிடந்த தாயக்காரியின் வாயில் வருவதெல்லாம் நூறென்ற பேச்சும் ஆயிரமென்றெ பேச்சுமே. நட்டகல்லின் தரிசனங்கிடைக்க எப்படி ஒருவரின் தயவு தேவையோ அதுவேபோல் தாசியின் தரிசனங் கிடைக்க தாயின் தயவே தேவை. அள்ளி அள்ளிக் கொட்டினாலொழிய பள்ளியறை காண்ப தெங்கே.

"கருத்தரித்து விட்டாள், மேலும் அதை அழிக்க முற்படுவது வீண் வேலையே" என்னும் தீர்மானத்திற்கு வரும் வரையில் வரும் மைனருக்கெல்லாம் "பெண் எப்பாவமும் அறியாள்" என்று மனமாறப் பொய்சொல்லி, அதிகத் தொகைகளைப் பறித்து, பல குடும்பங்களை நாசமாக்கி வருவர்.

பெற்றபிள்ளை சற்று பெரிதானவுடன், "பிள்ளை இன்னும் பெறவேயில்லை" என்றே நடக்கும் ஒரு சகப்தாம். பல்லாயிரக்கணக்கில் ஈந்துவந்தவனும் நொந்து போனால் வாசப்படியேறாதே என்ற உத்திரவு. இவ்வளவு அற்ப புத்தியும் கல்மனதும் வஞ்சக நட்பும் காசாசையும் பேராசையும் கொண்ட இவர்களும் தன் மகளுடன் முதல் முதலாக கலவி செய்வோன் ஒரு பார்ப்பனனாகத் தானிருக்க வேண்டும் என்றும், அம்முதல் பார்ப்பனனுக்கு காணிக்கை முதல் கொண்டும் வைத்துக்கொடுப்பது மல்லாமல் கன்னியையும் விட்டுக் கொடுப்பதென்றால் இப்பழக்கம்எக்காலத்திலிருந்துஎவரால் துவக்கியிருக்கக்கூடும் என்பதை வாசகர்களேதெரிந்துகொள்ளலாம். இத்துடன் நிறுத்தின் ஒரு தலைப்பட்ட வாதம் என்றே கருதுவார்.

அது காலத்தில் காட்டுமிராண்டிகளாயிருந்துவந்த மக்களை ஒரு கட்டுக்குள் அடக்கவேண்டி வெள்ளம் மின்னல், இடி, எரிமலை, பூமியதிர்ச்சி முதலிய பல காரணங்களைக் காட்டி, கடவுளின் கோபமேயென்று சொல்லி, "கடவுள்;" என்ற பயத்தைப்புகுத்தினர். மக்களைக் கூட்டுவிக்க கோயில்களைக் கட்டினர். உள்ளேநட்டனர்கையால் செதுக்கிய கற்பொம்மைகளை. கூட்டம் சேர்ந்தாலல்லவா கோயில் கூட்டம் கூட்டுவதெப்படி?

சிறுவர்களைக் கூட்ட தின்பண்டங்கள் வழங்கினர். வாலிபர்களைக் கூட்ட இளமங்கையரைக் கொண்டு ஆடவைத்தனர். பாடவைத்தனர். வயோதிகர்களைக் கூட்ட எழுதி வைத்தனர் பல கட்டுக்கதைகள். எதெது எவரெவருக்கு விருந்தளிக்குமோ அததைச் செய்தனர். என்றால் மிகையாகாது. இவ்வாதத்தைக் கொண்டும் பொட்டுக் கட்டும் வழக்கம்கோயில் ஏற்படுத்திய காலத்திலிருந்துதான் ஏற்பட்டிருக்கக்கூடும் எனச் சொல்ல வேண்டியேற்படுகிறது.

பொட்டுக் கட்டுதலும் தாலிக் கட்டுதலும் ஏக காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடும் எனவுங் கொள்ள இடமுண்டு. பொட்டுக் கட்டியவள் பொது மக்கள் யாவருக்கும் சொந்தம். தாலிகட்டியவள் தனிப்பட்ட ஒரு நபருக்கே சொந்தம். இந்நிலையை ஊராருக்குத் தெரிவிக்க பலப்பல உபாயங்களும், கேளிக்கைதமாஷ்களும் வாத்திய கோஷங்களும், ஊர் வலங்களும் உற்றார் விருந்துகளும் இன்னும் இவை போன்ற எத்தனை எத்தனையோ முறைகள்.

—: (x) :—

பகல் இராப்பத்தால் விளையும் தீமைகள்

—[எஸ். எம். ஜி.]—

என்ன அவசியம் என்று சிந்தியுங்கள். நம் சொந்த இருப்பிடத்திலேயே நமக்கு போதுமான உணவு கிடைக்கப் பெறாமல், உணவு பங்கீட்டின் மூலியமாக இக்காருண்யமுள்ள சுயராஜ்ய ஆட்சியில் வாழ்க்கை நடத்திவரும் இக்காலத்தில் தங்கள் இருப்பிடத்தை விட்டு இந்த நெருக்கடியான காலத்தில் திருவரங்கத்திற்கு ஏன் மூட்டை முடிச்சுடன் ஏக குடும்பத்துடன் விஜயம் செய்யவேண்டுமென்று கேட்கின்றேன். ஒருநாள், இரண்டு நாட்கள் அல்ல இருபது நாட்கள் தங்கவேண்டிய லட்சியம் என்ன? உங்கள் விஜயத்தால் ஏற்படும் பயன் என்ன? திருவரங்கத்திற்கு அண்டையில் உள்ள திருச்சியில் காலராவும், மற்ற ஏனைய பாகத்தில் காலரா என்கின்ற பீதியும் கொண்டிருக்கும் சமயத்திலும், நம் திராவிட பக்த கோடிகள் திரள், திரளாகி இங்கு வருகின்றார்கள் என்றால் இதைவிட மதியீனம் வேறு என்ன இருக்கின்றது. மேலும், அவர்களது வருகை எவ்வாறாயிருக்கின்றது என்றால், நமது [illegible] பத்திரிகையின் அறிக்கை பிரகாரம், "10 நாட்கள் முன்னதாகவே நமது உற்றார் உறவினர்கள் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்பது போல காணப்படுகிறது.

பகல் பத்தும், இரா பத்தும் தங்கியிருந்து இங்கு உள்ள, திருரெங்கநாதனை தரிசிக்கவேண்டியது முக்கியந்தானா? இதனால் விளையும் கேடுகள் எண்ணற்றவை என்பதை சிறிதேனும் சிந்திக்கவேண்டாமா? நமது மூதாதையர்கள் செய்த வழியைத்தான் பின்பற்ற வேண்டுமா? அவர்கள் ஒரு சிறு கூட்டத்திற்கு வசப்பட்டு கண்மூடித்தனமாக வாழ்ந்தார்கள் என்றால் நாமும் அவ்வாறே வாழவேண்டுமா? உழைக்காமல், உப்பி கொழுத்த ஒரு நயவஞ்சகக் கூட்டத்திற்கு மானமுள்ள திராவிடன் அடிமையாகவா? சிந்தியுங்கள், நன்றாக சிந்தியுங்கள், என்று கேட்கின்றேன்.

உங்கள் வரவினால் ஒரு கூட்டத்தார் நிமிர்ந்து கொழுக்கின்றனர். உங்கள் செல்வம் அவர்களது பாதங்களைமுத்தமிடுகிறது. உங்கள் பசியை ஆற்றுவதற்கு கிளப்புகளில் உண்ண வேண்டியிருக்கின்றது. கிளப்பு முதலாளிகள் 1 படி அரிசியை கண்ட்ரோல் விலைக்கு அதாவது 10 அணுவுக்குவாங்கி குறைந்தது 13 ரூபாய்களுக்கு உணவு அளிக்கின்றார்கள். அதன் விலையோ சாப்பாடு ஒன்றுக்கு 9 அணா, சர்க்காரும் இதைப்பற்றி பராமுகமாக இருந்து வருகின்றது. ஆனால் ளப்புக்காரர்களோ ஏகப்பட்ட லாபம் சம்பாதிக்கின்றார்கள் என்பது பொய்மையாகுமா என்று சிந்தித்துப் பாருங்கள் இதுமட்டுமா உங்களது வரவினால் அனுத்துப் போன பட்டாணிக் கடலையும், பொட்டுக் கடலையும், வாசம் வீசிய பொரியும் விலையாகின்றது. உள்ளூர் விலைவாசிகளும் அதிக விலைக்கு விற்கப்பட்டு, நெருக்கடியும் ஏற்படுகின்றது. உங்கள் வரவினால் சில காமயிச்சையினால் அவதியுறும் மைனர்கள் "விபசார ஒழிப்பு உஷார் சங்கத்தின்" அங்கத்தினர்களின் கண்ணிலும் மண்ணை தூவி விட்டு "கும்பலில் கோவிந்தா" என்ற கரகோஷத்துடன் விபசார நாரிமணிகளின் கண் சிமிட்டலினால் மயங்கி, அவர்களது வலையிலும் சிக்கிக்கொண்டு, தாங்கள் திருடி வந்த பணத்தையோ, அல்லது நயவஞ்சகமாக சம்பாதித்த பணத்தையோ, அல்லது நேர்மையாக சம்பாதித்த பணத்தையோ அவர்களது இச்சைக்கு காணிக்கையாக கொடுத்துவிட்டு, திரும்பி போய் ஊர் சேர்வதற்கும் கையில் ஒரு தம்பிடியும் இல்லாமல் வெறும் ஓட்டாண்டியாக போகும் வாலிபர்கள் எவ்வளவு பேர்கள்! உங்கள் வரவினால் உங்ககளது கூட்ட நெருக்கடியில் உங்களது மணிபர்ஸ்கள் களவுபோவதும், உங்களது பெண்டு பிள்ளைகளின் நகை நட்டுகள் பறிபோகுவதும், உங்களது பிள்ளைகளின் நகைகள் போவதும் அல்லாமல் உங்கள் பிள்ளைகளின் உயிருக்கே சில சமயங்களில் ஆபத்து ஏற்பட்டு விடுகின்றது என்பதை நாம் பத்திரிகையின் மூலமாகவே வாசித்து இருக்கின்றோம் அல்லவா? உங்கள் வரவினால் கோவில் பெருச்சாளிகளால் விற்கப்பட்டு வரும் கல், மண் நிறைந்த தடித்த தோசைகளும், தடித்த அப்பங்களும் புளியோதரை, வெண்பொங்கல், சர்க்கரைப்பொங்கல், தயிர் அன்னம் முதலியவைகள் அவர்களது வேர்வையால் கழுவப்பட்டு, உங்களுக்கு பிரசாதமாக விநியோகிக்கப் பட்டு, நீங்களும் பரமன் பிரசாதம் என்று உண்டு களித்து பிறகு வயிறு வேதனை பட்டது மறக்க முடியுமா என்று கேட்கின்றேன். ஆதலால் நாம் ஏழ்மையாகவும், தரித்திர நாராயணர்களாகவும், சொத்தையிழப்பதில் முதல்வனாகவும் சுகாதார விதிகளை மீறி நடந்து நோய்களுக்கு அடிமையாகவும் பொதுவில் நமது திராவிட பெருங்குடி மக்கள் பாதிக்கப்பட்டு வருவது பொய்யாகுமா என்று கேட்கின்றேன். வாசகர்களே! பகுத்தறிவுள்ள தன்மான பெரியோர்களே! வாலிபர்களே ஒன்றாக யோசித்து, சிந்தனை செய்து பாருங்கள். இவ்வித யாத்திரை நமக்கு அவசியந்தானா? நன்றாகச்சிந்தித்துஓர் முடிவுகூறுங்கள்.

—: (x) :—

ஏ' பத்திரிகையே!

நேசிக்கும் நேயரின் நெஞ்சைப் பிளக்காதே!

து. கணேசன்.

ஆசிரியருக்கு வணக்கம். தாங்கள் 1-1-49 ம் இதழில் தீட்டிய 'கும்பகோணத்தில் ரத்தம் சிந்தியதேன்?' என்ற தலைப்பில் இந்தியை எதிர்ப்பவர்களின் போக்கை நாம் கண்டிக்கிறோம் என்று வாய் கூசாமல், வயிற்று எறிச்சலோடு வாரி இறைத்த வார்த்தைகளை கண்டவுடன், சிந்தித்துப் பாராத சிற்றறிவினர், அனைத்தையும் அலசிப் பார்க்கும் அகண்ட அறிவினர் அல்ல, கண்மூடித்தனமான கட்டு திட்டங்களை விரும்பிய மூளையை முறியடிக்கும் முட்டாள் கொள்கைகளுக்கு தூபம் போடும் தூதுவர் என்றே நினைப்பதில் விந்தை யில்லையே! விபரீதமாக நினைத்து விடாதீர் தோழரே. விளக்கம் தருகின்றேன்.

இன்பத்தேன் ததும்பி நிற்கும் தமிழில், மக்களால் போற்றப்படும் கருத்து, ஆண்மையை ஊட்டும் ஆழ்மையான கருத்து, வேற்றுமையை ஒழித்து முன்னேற்றத்தை அளிக்கும் கருத்து, இருண்ட நாட்டிற்கு ஒளி அளிக்கும் கருத்து, நாட்டிலே நம் நாகரீகத்தை பரவச் செய்யும் கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன. அதன் அழிவால் தமிழ் நாடு கெடும், தமிழ்கலை அழியும் என்று ஆயிரம் தடவைக்கு மேல் ஆற்றும் சொற்பொழிவுகளிலும், பேசும் மேடைகளிலும், புனையும் கவிதைகளிலும், எழுதும் கட்டுரைகளிலும், நடிக்கும் நாடகங்களிலும், நாட்டிலுள்ள மக்களுக்கு எடுத்துக் காட்டி, ஏடு திருப்பி, பால் மணம் மாறுத பச்சிளங் குழந்தைகளுக்கு, பரிவாக பரிந்துபேசி நச்சு கலந்த ஆரியமொழியை புகுத்துவது அறிவீனம் என்று எடுத்துக் கூறினோம்.

ஆனால் தாங்களோ அதை மறந்தோ அல்லது மறைத்தோ ஆணவத்தால் சிறுமதி கொண்ட புல்லேந்திகளின் மந்த மதியை மட்டம் தட்டாமல், ஆபாசத்தை அறுத்து விடாமல் ஆர்வத்தை அதிகப்படுத்தாமல் அறிவாளி அண்ணா கூறுவதை அசட்டை செய்துவிட்டு, அய்யர் வாக்கே அமர வாக்கென மதித்து, வீரத்தில் வீம்பு கொண்டிருந்த தமிழனை, வெற்றியில் நாட்டங் கொண்டிருக்கும் திராவிடனை மொழியில் முன்னேறி, பகுத்தறிவுச் சாலையில் பயமின்றி நடக்கும் பகுத்தறிவாதியின் இலட்சியத்தின் நேர்மையை அறப்போர் வீரர்கள் குடந்தையில் கையாண்ட ஒழுக்கத்தின் மேன்மையினை, நீதியின் அவசியத்தை எங்கள் திராவிடத் தந்தை பெரியார் வகுத்துத் தந்த திட்டத்தின் நேர்மையை கண்டு களிப்பும், பூரிப்பும், மகிழ்ச்சியும் மறத் தமிழனின் வீரத்தையும், விவேகத்தையும் பதுங்கலின்றி பகட்டாக கூறுமல், தன் நிலை உணராமல், கல்வி அறிவு இல்லாத கசடராய், கதறுவதைக் கண்டு கலங்குவதா, அல்லது கடுஞ் சினங் கொள்வதா?

ஆரிய இனமே வஞ்சகக் கரு என்ற எண்ணத்தை நீக்க மதிவாணர் நமக்கு தந்த மணி விளக்கே இந்தி எதிர்ப்புப்போர் என்ற ஆழமான கருத்தை அறிந்து கொள்ள முடியாத அன்பரே. அவசரத்தின் மிகுதியால் ஆபாச நடையில் சொல்லுவது அறிஞனுக்கு அழகா! சோம்பி நிற்காமல், சுருண்டு படுக்காமல், ஓடி ஒழியாமல், அஞ்சி அலறுமல், வதைப்பட்டு வாழ்வை இழந்த உள்ளங்களிலே மகிழ்ச்சியைக்காண, புத்துணர்ச்சியை உண்டாக்க, மனங் கலங்காத தீர புன்சிரிப்போடு, பொறுமை உணர்ச்சியோடு. விடுதலை பெற்று நலமுடன் வாழும் நற்காலத்தை நாடியே, நாட்டின் மொழி, எங்கள் தமிழ்மொழியின் அருமை, பெருமையை, பீடு நடையுடன், பெருமித நோக்கத்துடன், நிமிர்ந்த நெஞ்சுடன், நெருப்புக் கண்களோடு, அனலை கக்காமல், அன்பைப் பொழிந்து கொண்டு சாந்த சொரூபி சத்ய ஞானி அகிம்சையின் அண்ணல் காந்தி அடிகள் கூறிவிட்டுச் சென்ற, நேர்மையான வழியில் நாட்டங்கொண்டு, காலில் செருப்பின்றி கடும் வெயிலிலும், கண்டவர் கண்டு கருணைகாட்டும் விதம் அறப்போர் செய்வது வீண் மண்ணசை சண்டையா, அல்லது ஏகாதிபத்தியத்தை அபகரிக்கும் ஆக்ரமிப்புப் போரா?

வாலிப உள்ளங்கொண்ட, காளைகள் வலிய சண்டைக்கு வரவில்லை. ஏகபோக வாழ்வை ஒழித்து, அடிமைத்தனத்தை அழித்து, தமிழ்தாயின் தளிர் மேனியில் பூட்டப்பட்டிருக்கும் இரும்பு காப்புகளை தெறித்து, உலகம் உய்ய, வறுமை வாட, மடமை மாய. தந்திரத்தாலும், சூழ்ச்சியாலும், தன் நலத்திற்காக பிறரை நசுக்கும் சுபாவத்தையும், சுரண்டு தலையும் தகர்த் தெறிவோம். தமிழுக்கு மெருகு தீட்டி, ஒளி ஊட்டி, உலகுக்கு அளிப்போம்,

அலுப்போ, சலிப்போ, ஆயாசமோ அடையாமல் நலிந்தோரை நரம்பு முறுக்கேற்றி எழச் செய்வோம். கவிக்குயில் கனக சுப்புரத்தினம், தமது உள்ளத்தில் பொங்கி எழுந்த கற்பனைகளை, கவிதைகளின் மூலம் உணர்ச்சி செறிக்கும் ஆவேச நடையை அள்ளி அருந்திடுவோம். இடையே புகுந்த ஆரிய வேதாந்தத்தால்' இழிந்துரைக்கும் சாதி ஆணவத்தின் அச்சாணியை, ஆணிவேரை, அறுத்தொழிவோம். வள்ளுவன் பிறந்த நாட்டிலே, வாள் ஏந்தி, மன்னர் பலரை வென்று மாநிலம் ஆண்ட மாதர்கள் வாழ்ந்த இந்த நாட்டிலே, மடமை நிறைந்த மதங்களும், வெறுக்கத்தக்க வேதங்களும், தலைகாட்டாமல் தவிடு பொடியாக்குவோம்.

தாக்குதலைக் கண்டு அஞ்சோம். ஏழனத்திற்கு ஏமாறமாட்டோம். வேற்றுமைகளையும், பகைமைகளையும், சண்டைகளையும், சச்சரவுகளையும் வளரச் செய்து, மதிமயங்கி மதத்திற்கு மண்டியிடமாட்டோம். மதமென்னும் சுவரை எறிக்குதிப்போம். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, உடம்பின் எலும்புகள் முறியும் விதம் வேலை செய்யும் ஏழைத்தொழிலாளிகளின் சார்பிலே கருணை காட்டி, பணநாயக ஆட்சியை பாதாளத்தில் தள்ளி, ஜனநாயக ஆட்சி, பாட்டாளி ஆட்சி அடைய, மக்கள் ஆட்சி மலர, மன்னர் ஆட்சி மடிய; இன்னலைக் கண்டு அஞ்சாத திண்ணிய மனம் பெற்று, அறிவு வளர்ச்சியை அடக்கி, ஒடுக்கி, அடிமைகளாய் வைக்க நினைக்கும் இந்தியை, இலக்கிய, இலக்கணமற்ற நேற்று தோன்றிய, தொன்மையற்ற இந்தியை, உம்மைப்போன்ற உலுத்தர்களின் நயவஞ்சக சொல்லினுல் நாட்டங் கொண்டு நலியாமல், அறிவுக்கு அடிகோலி, மூடப் பழக்க வழக்கங்களை வெட்டி எறிந்து., சீர்திருத்த கொள்கைகளை சிறப்புடன் ஏற்று, அறியாமையினுல் அல்லல் படாமல், கொழுந்துவிட்டு எரியும் புரட்சிக் கருத்துக்களை சுதந்தர மனதுடன், சுயேச்சையான உரிமையுடன் என்றென்றும் நிலை குலையாத சுகத்துடன் வாழ, வாழ்க்கையின் வஞ்சக கலைகளை அறுத்தெறிந்து தாண்டிச் செல்வோம் இன்ப புரியை நோக்கி.

அறிவு வளர்ச்சிக்கு அறிய மருந்தென கொண்டு உமது பேனு முனையை தீட்டாமல் உள்ளத்தைத் தொட்டு இரக்கம் உண்மைகளை கூறுமல், தமிழர் வீரத்தை சாய்த்து, கொடுமை செய்யும் இந்தியை தாக்கி, அறிவுக்கு ஆக்கம் கொடுக்காமல், எங்கள் தலைவரை தென்னுட்டுத் தளபதியை சொந்த இனத்தவரை, தீரரை, மாரரை, இழித்தும், பழித்தும் காமாலை கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்ற மொழியின்படி முன்னுக்குப் பின் முரணுய், தமிழரின் தன் மானத்திற்கு மாசு

(6-ம் பக்கம் பார்க்க)

இது உண்மையா?

குட்டிச்சாத்தானுக்கே விண்ணப்பம்.

1. சைதாப்பேட்டைக்குப் போகும் வழியில், முன் புல்தோட்டமாயிருந்ததில் இப்போது சர்க்கார் அரிசி கிடங்கு அமைத்திருப்பது உண்மையா?

2. 3வது நெம்பர் கிடங்கில் ஒரு அரிசி மூட்டை குறைவது உண்மையா?

3. அந்த அரிசி மூட்டைக்கு இரண்டு கால்கள் முளைத்து, ஒரு பங்கீடு உதவி உத்தியோகஸ்தரிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு மைலாப்பூரில் குடியிருக்கும் ஒரு கெஜட்டட் ஆபீசர் வீட்டுக்குள் நுழைந்து விட்டது என்பது உண்மையா?

4. வழி அனுப்பிக் கொடுத்தவரும் வரவேற்புக் கொடுத்தவரும், இவ்விருவரும் பார்ப்பனர் என்பது உண்மையா?

5. தோழர் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் 18-1-49, முத்தையா செட்டி உயர்தரப் பள்ளியில் காந்தியார் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், "கோபத்தை அறவே ஒழிக்கவேண்டும்" என மாணக்கர்களுக்கு உபதேசம் செய்தது உண்மையா?

6. சொற்பொழிவு தீர்ந்ததும் மாணக்கர்கள் பலர் காங்கிரஸ் தலைவரின் கையெழுத்துப் பெறுமாறு மேடைக்குச் சென்றது உண்மையா?

7. தலைவர் அவர்களுக்குக் கோபம் பொங்கி மாணக்கர்களை தானே பிடித்துக் கீழே தள்ளியது உண்மையா?

8. அதில் ஒரு மாணக்கர் கால் இடறி தலை கீழாக விழவிருந்ததில் பக்கத்திலிருந்தவர்கள் பிடித்துக் கொண்டனர் என்பது உண்மையா?

9. பிடித்திராக்காவிடில் அம்மாணக்கரின் கதி அதோ கதி ஆயிருக்கும் என்பது உண்மையா?

10. அக்காலத்தில் பொறுமைக்குத் திருவள்ளுவர் இக்காலத்தில் பட்டாபி சீதாராமய்யா போலும் என்று ஊருக்குள் நக்கலாகப் பேசுவது உண்மையா?

"குண்டாந்தடி"

பிறித்தாளும் சூழ்ச்சி!

"பிரித்தாளும் சூழ்ச்சியில் பிரிட்டிஷ்காரன் மிகவும் தேர்ச்சியுடையவன். அவன் நம்மைப் பல வராப் பிறித்துவிடவே நம்மிடையே ஒற்றுமையின்றி வாழ்ந்தோம். இதனை தனக்குச் சாதகமாகக்கொண்டு நம்மை இத்தனை ஆண்டுகளும் கட்டி ஆண்டான்" என்பார் சொற்பொழிவாற்றும் மாபெரும் தியாகி ஒருவர். இத்தகையப் பிறிததாளும் சூழ்ச்சியை ஆங்கிலேயன் அந்த நாட்டிலிருந்து வரும்பொழுதே கையுடன் கொண்டுவந்தானா? இல்லவே இல்லை. நம் பாரத பூமியில் வாழும் ஆரியரிடமிருந்தே அதைக் கற்றுத்தேறினான். இராவணனைக் கொல்ல அவன் தம்பி விபீஷணனை மறத்தமிழனிடமிருந்து பிறித்தது ஆரியம். இரணியனைக் கொல்ல மகன் பிரகலாதனை இணையற்ற வீரனிடமிருந்து பிறித்தனர். சூழ்ச்சி வென்றது. சூழ்ச்சியில் சிக்கிமாண்ட மாபெரும் மன்னர்கள் அரக்கர்கள், அசுரர்கள், அநாகரீகர் என பலப்பல பேசியும் இகழ்ந்தும் ஏட்டினில் எழுதப் பட்டுவிட்டனர். அண்டிப் பிழைக்கவந்த ஆங்கிலேயர்களுக்கும் ஆரிய சூழ்ச்சியின் மூலம் அதிகாரம் கிடைத்தது. ஆங்கிலேயரும் வெளியேறி ஆண்டுகள் இரண்டாயின. ஆயினும் இன்றும் ஆரியசூழ்ச்சிகள் நின்றபாடில்லை. தனிப்பட்ட ஓர் இனமக்களை வீழ்த்த அவர்களின் மொழியை முதலில் கொல்லவேண்டும்: அம் மொழியின் தனித்தன்மையை அழிக்கவேண்டும். அம்மொழியை பல கூறாக பிரிக்க வேண்டும். பிறகு அவ்வின மக்களின் ஒற்றுமையைப் போக்கவேண்டும். மொழியை பலகூறாகப் பிரித்ததுபோல மக்களையும் பலகூறாகப் பிரிப்பது அவ்வளவு கடினமல்ல. பிரிந்தமக்கமள் மீண்டும் ஒன்று சேரா வண்ணம் தடுக்க வேண்டும், இவ்வாறு ஓர் இனமக்களை பாழ்படுத்திவிட்டால் எதிரிக்கு அம் மக்கள் மீது அடக்குமுறை அதிகாரம் செலுத்தமிக்க இலகுவாகும்.

ஆடு, மாடுகள் ஓட்டிக்கொண்டு அண்டிப் பிழைக்கவந்த ஆரியர்கள் இந்த சூழ்ச்சியையே கையாண்டனர். திராவிடமக்களையும் திராவிடமொழியாகிய் தமிழையும் பலகூறாகப் பிரித்தனர். மீண்டும் சேராதவகையில் மக்களையும் மொழியையும் பிரித்தபிறகு சமயம் வாய்த்தபொழுதெல்லாம் தம் மொழியாகிய வட மொழியை திராவிட மொழியுடன் கலந்தனர். தமிழர்களும் தெலுங்கர்களும் இன்னும் மற்றையோரும் தாங்கள் திராவிடர் என்ற ஒருமை மனப்பான்மை இழந்து வீண் சண்டையிட்டுக்கொண்டிருக்கவே அண்டிப்பிழைக்கவந்த ஆரியக்கும்பல் ஆரியமாயைத் தூவி ஆண்டு வருகிறது. ஆரிய மாயைக்கு அடிமைப்பட்டிருந்தது திராவிடம்.

ஊர் இரண்டுபட்டால் பூசாரிக்குக் கொண்டாட்டம்தானே? நான்கு பசுக்கள் ஒற்றுமைாக இருந்ததினால் எதிர்த்து வந்த கடும்புலியையும் வெற்றிக் கொள்ள முடிந்தது. பசுக்கள் சூழ்ச்சியினால் பிரிக்கப்பட்ட பிறகு புலி சுலபமாக பசுக்களின்மீது வெற்றி கொண்டது. சூழ்ச்சிக்கு இரையாயின பசுக்கள். இந்தக் கதை சிறுவர்களுக்குக் சொல்லக்கூடியதாயினும் இதனுள் எத்தகைய உண்மை யடங்கியுள்ளது என்பதை கூர்ந்து நோக்குங்கள், தோழர்களே! இத்தகைய புலித்தந்திர மாகிய பஞ்சதந்திரத்தினின்றும் —சூழ்ச்சியினின்றும்—விழிப்புறுங்கள்!

இன்றும் சூழ்ச்சிகளுக்குக் குறைவில்லை. அரசாங்கத்தாரின் இலாக்காக்களில் ஒன்றாகிய ஒலிப்பரப்பு இலாக்காவில் இத்தகைய சூழ்ச்சிகள் நடைபெறுவதை நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். திராவிடரிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினால் அன்னிய மொழி — இன்சுவையற்ற இந்திமொழிக்கு இடம் கிடைத்து வருகின்றது.

திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலயம் தமிழ் நிகழ்ச்சிகளுக்காகவும், விஜயவாடா ரேடியோ நிலயம் தெலுங்கு நிகழ்ச்சிகளுக்காகவும் அரசாங்கத்தினர் நிருவியுள்ளனர். திருச்சியில் தமிழ் நிகழ்ச்சிகளும் விஜயவாடாவில் தெலுங்கு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவது இயல்பே, விஜயவாடாவில் மருந்துக்குக்கூட தமிழ் நிகழ்ச்சிகள் கிடையாது. ஆனால்அங்கு இந்திநிகழ்ச்சிகளுக்குக் குறைவேயில்லை. திருச்சியில் தெலுங்கு நிகழ்ச்சிகள் கிடையாது. ஆனால் அங்கும் இந்தி இசைத்தட்டு நிகழ்ச்சிகளுக்கும் இந்தி சொற்பொழிவுகள் அஞ்சல்களும் குறைவில்லை. சென்னை நிலயமும் இந்திக்கு பெருந்தொண்டு செய்தே வருகிறது. அன்னிய மொழியை வளர்க்க அரும்பாடுபட்டுவருகின்றன. இவைகள் எதனால்? நம்மிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினால் அன்றோ!

திராவிடரை தமிழர், தெலுங்கர், மலையாளிகள் கன்னடியர் என்றும் திராவிட மொழியை தமிழ், தெலுங்ன், மலையாளம் கன்னடம் என்றும் பலகூறாகப் பிரித்து விட்டதனால் நாம் வீண் சச்சரவிட்டுக் கொண்டிருக்கின்றோம். நாம் இவ்வாறு சண்டையிட்டுக்கொண்டிருக்கவே மூன்றாம் மனிதனின் அடக்குமுறை ஆட்சிக்கு ஆளாகிறோம். தமிழர், ஆந்திரர் அனைவரும் திராவிடர் என்ற ஒரே பெயரில் ஒற்றுமைப் படவேண்டும். தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று கூச்சலிட்டுக் கொண்டிராமல் திராவிட மொழி ஒன்றே என்று பெருமை கொள்ளவேண்டும். என்று திராவிடரிடையே ஒற்றுமை மனப்பாண்மை ஏற்படுகின்றதோ அன்றே நன்னாள்! அன்றே அன்னிய ஆட்சி அகலும் நாள். திராவிடம் தனிச்சிறப்புடன் தழைத்தோங்கும் திருநாள்! அன்னாள் அதிகதூரத்தில் இல்லை என்பதை நாம் நம்பலாமா?! வாழ்க திராவிடம்!

இந்தி எதிர்ப்புக் கூட்டம்

பொள்ளாச்சி 10-1-59 திங்கள் 6 மணி அளவில் தேர் நிலைத்திடலில் மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. ஆராய்ச்சிப் பதிப்பக உரிமையாளர் தோழர் அ. ச. பாலு தலைமை தாங்கினார்.

அதுசமயம் வீ. சையத்தாசுதீன் மகமது என்ற(9) ஒன்பது வயது சிறுவன் இந்தி எதிர்ப்பு இன்னிசை முடிக்கினான். கோபி தோழ்ர்—ராசு, ஈரோடு அப்பாவு, கே. எ.மதியடிகன் முதலிய சல தோழர்கஉ இந்தியை இந் நாட்டில் புகுத்தும் இழிசெயலை கண்டித்தும், தற்கால அரசியல் நிலை அரசியல் வீலையில் திகழுசிறதென்றும், இந்நிலைமாறி விடுதலை டபற்ற திராவிடமாக விளங்க மக்கள் அனைவரும் திராவிடர் சமூகத்தில சேர்ந்து பணியாற்றவேண்டுமெனவும் பேசினர். திரளான மக்கள் கூடி இருந்தது குறிப்பிடத்தக்கது.

தலைவர் முடிவுரைகருப் பின் கூட்டம் இனிது கலைந்தது. பொன்னுசாமி

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

தேடாமல், பகுத்தறிவின் பண்பாட்டிற்கு இழிவு உண்டாக்காமல், இதயத்தில் பீறிட்டுவரும் இறுமாப்பால், புகழுக்காக ஆசைபட்டு, பொது நலப்பணியில் குதிக்காமல், உள்ளத்தில் உறைந்திருக்கும் நச்சுக் கருத்துக்களை உண்மைக்காக, சாதி, சமய, கட்சி வேறுபாடியிறி பூனைக்கும் தோழராய், பாலுக்கும் காவலராய், அமையாமல், மின்னல் வேகத்தில் வளர்ந்து வரும் ஓர் இனத்தின் இருதய கீதத்தை தாக்கி, திராவிடர் கழகத்தின் கொள்கைகளை நேசிக்கும் நேயர்களின் நெஞ்சை பிளக்காமல், ஆண்மையின் துணை கொண்டு, பத்தாம் பசலித் தன்மை கொள்கைகளை பறக்கவிட்டு, பல் இளிக்காமல், பதவி பித்தமென்னும் பேயை விரட்டி, அஞ்ஞாணத்தை ஓட்டி ஞானத்தை அளிக்கும் ஞானசிரியனாக விளங்குவாய் என்று நம்பி, ஒல்லியான உருவமான நான் ஓய்வெடுத்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்

ஆசிரியரே மீண்டும் சந்திக்கலாம் பகுத்தறிவுப் போர் களத்தில்.

இன்பதிராவிட பழங்குடி மக்களுக்கு இனிய பொங்கல் நல்வாழ்த்து

—: (x) :—

தேன்மாறி பொழியும் இத்தைப் பொங்கலின்புதுநாள், தமிழா திருநாள் திருந்திய தண்டமிழநின் பூரிப்புநாள்! இந்நாளில் பிறநாடி சென்று அடிமையாய் பிழைக்கும் திராவிடமக்கள் நிலை உயர்ந்து, நாட்டின் அடிமைநீங்கி வண் தமிழ் நாடு விடுபட்டு, மக்கள் புத்துலக சிற்பியாகி, பாலும் தேனும் - செங்கரும்பு சுவையும்சேர்ந்து வழித்தெடுக்கபட்ட பொங்கல் போல - திணவெடுத்தோண் தமிழனில்லந்தோறும், முத்தமிழ் இசையும், இன்பமும் தவிழ்ந்து, தவிழ்ந்து, விளையாடும் தங்கத் திருநாளாகிய இந்நாளில்—மக்கள் மதிவளம் மிகுந்து, வரண்டவருமை, இருண்ட வாழ்க்கை ஒழிந்து, சிந்திக்கும் பண்பு செழிந்து, நாட்டின் நிலை உயர் மக்கள் உள்ளத்திலே நல்வாழ்த்து நர்த்தனமாட்டும். பூக்குபுதுவளாபோல வாழ்க்கையில் நண்மணம வீசட்டும் படைத்தோரின் கொட்டம் சரியட்டும் வம்பாடுபட்டு வயலில் குளைமிதித்து உழைத்த ஊதியத்தை உரிந்து கொள்ளைலாபமடிக்கும் முதலாளி கூட்டம் முறியட்டும், உண்பதற்கு அரைவயிறு உணவு, உடுட்பதற்கு ஒருமுழம் துணி, வசிப்பதற்குவசதியின்றி தாழ்ந்த குடிசைவீடு இவைகள் மாறட்டும். ஏழை, பணக்காரன், தீண்டப்படாதவன் போன்ற பலவிதமான மாறுபாடுகள், மாறட்டும் ஆண்டு, ஆண்டுகளாக ஆரியத்திற்கு அடிமை, செய்யும் திராவிடமக்கள் உள்ளம் கெட்டு உருகுலைந்து சிதறிக்கிடக்கும் செந்தமிழ் இவையனையும் மாறி இன்பபுரி நோக்கி இனிதுடன்பயணம் செய்ய அனைவரும் ஆசிகூறி மனமாற வாழ்த்தட்டும், வருங்கால திராவிடதனியரசிலே சுரண்டுபவன், சுரண்டபடுபவன் ஆண்டான் அடிமைகளனைவும் அழியட்டும் மானபிமானமின்றி மாற்றானை மானமின்றி மருவி மடியிலிருப்பதை பிடுங்கி வாழும் மார்வாடிக்கும் பலின் கொட்டம் மரட்டும் மரத்தை குணம் கொண்ட பார்பனய பராறிகளை பாராளு மன்றத்திலிருந்து பறந்து செல்லட்டும். பாடுபடும் பாட்டாளிகள் பயனை பரம்பரையாக உரிந்து சுந்தரமனோ கரிகளோடு சுகவாழ்வு செய்தும் முதலாளிகளின் இரும்பு பிடியிலிருந்து நீங்கி உழவர்களின் அடிமைத்தனம் நொருங்கி ஏர்முனை போர் முனையாகமாறி அவர்கள் உன்னத லக்ஷியம்பெற ஊர் அமைதிபெற உளமாற பண்முறை பகர்ந்து பகர்ந்து பற்களும் காய்ப்பேரும்படி வாழ்த்துகிறேன் திராவிட மக்கள் களுக்கு பொங்குக பொங்கல்—தங்குக எங்கும்.

திராவிடதோழன் கமல செல்வம்.

—(x)—

குன்னூர் திராவிடர் கழகத் கூட்டத்திற்கு 144 தடையுத்தரவு

1—1—49-ல் திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் அறிக்கைப்படி வெற்றி விழா கொண்டாடுவதாக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது இன்று காலை உள்ளூர்போலீஸ் அதிகாரிகள் திராவிடக் கழகத் தலைவர், செயலாளர், குறிப்பாக தோழர் திருச்சி சி. ம. சஞ்சீவிராஜ், முதலீயோரிடம் தடை உத்தரவு சார்வு செய்யப்பட்டது.

பிரஷ்கள் பிரஷ்கள்

தி. ஹிந்துஸ்தான் பிரஷ் வொர்க்ஸ்

2. அட்கின்சன் ரோடு, வேப்பேரி, சென்னை.

வொர்க் ஷாப் 22. பூந்தமல்லி ஹைரோடு

பெரியமெட்டு சென்னை 3.

—: (x) :—

ரோலிங் பிரஷ்களை புதுப்பிப்பதில் பெயர் வாய்ந்தவர்கள். எங்களிடம் எல்லா வித பிரஷ்களும் எந்த ரகத்திலும், எந்த அளவிலும், எந்த தேவைக்கும், மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

குறைந்த விலை. உயர்தர வேலைப்பாடு

விமலாவின் வேண்டுதல்

[மு. அ. இராசகோபால் திருப்பூர்]

வாழ்ந்து கெட்டு வறுமையில் வாடும் குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. எங்கள் வாழ்க்கை மலர்ந்து வறுமை நீங்க வகையின்றி வாழ்வின் இருண்ட நிலையைக் காணச் சகியாத என் தந்தை, என்னையும் அன்னையையும் பரதவிக்கவிட்டுப் பரலோகம் சென்று விட்டார். கண்ணின் இமை போல் காத்து அன்பை அள்ளித் தெளித்து ஆதரித்து வந்த என் தந்தை இன்று இல்லை- காடு முரடான வாழ்க்கைப் பாதையில் கன்னியாகிய நானும் கைம்மையான தாயும் காலங் கடத்துவது கஷ்டமாகத்தான் இருந்தது. நான், பள்ளிப்படிப்பு படித்தவள் தான்—மனதிலே தைரியம் இருந்தது-உடலிலே வலிவும் வனப்பும் இருந்தது-இளமையின் துடிதுடிப்பு இன்பக் கனவுடன் தான் இருந்தது. ஆயினும் பேதைப் பெண்தானே! ஆண்கள் போல் வேலை செய்ய முடியுமா? அதற்குச் சமூகம் தான் இடம் தருமா? தந்தை இறந்ததும் சுற்றத்தார் கூடினார்கள், எங்கள் நலனில் அதிக அக்கறை காட்டினார்கள், கடைசியாக எங்கள் வாழ்வு மலர என் வாழ்வைப் பணய மாக்கினார்கள்.

சூழ்ந்திருந்த அனைவரிடமும் மஞ்சள் கலந்த அரிசி தரப்பட்டது. என் முன்னால் சில சுள்ளிகளை எரித்துக் கொண்டு புரியாத மந்திரத்தை ஓதிக் கொண்டிருந்தார் ஐயர்,... சூரியன் நவக்கிரகங்கள் தேவர்கள் மூவர்கள் யாவரும் சூழ்ந்திருக்க - மஞ்சள் கயிற்றை ஐயர் அந்தத் தாத்தாவிடம்.. அல்ல...அல்ல...— என் மனதைக் கவர வந்த மணாளன்—என்னைக் கட்டியணைக்க வந்த காதலனிடம்-கொடுக்க அவர் வெகு பயபக்தியுடன் வாங்கி கை நடுங்க - உள்ளம் துடிக்க-யாரோ ஒரு பெண் என் தலையை நிமிர்த்த என் கழுத்தில் அந்தக்கயிற்றைக் கட்டி மூன்று முடிச்சுகள் போட்டார்- பிர்ம்மன் முடிச்சுப் பிரியாமலிருக்க அதன் மேல் குங்குமம் புட்பங்களையும் வைத்தார். ஏதோ ஓர் ராகத்தை அப்பொழுது தான் சுவாரஸ்யமாக ஆரம்பித்து வாசித்துக் கொண்டிருந்தான் நாயனக்காரன். "கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்று பலர் கூச்சலிட—ஆரம்பித்த ராகத்தை முடிக்குமுன்—அலுத்துச் சலித்து நாயனத்தைக் கீழே வைத்தான் வாத்தியக்காரன்: எல்லாவித தாளத்தையும் ஒருங்கே அடித்து முழக்கினான் மிருதங்க வித்வான். வாங்கியிருந்த அரிசியை வாரி இறைத்து வாழ்த்தினர் வந்திருந்தோர். சூழ்ந்திருந்த தேவர்களும் மறைந்தனர். என் வாழ்வின் ஒளியும் மறைந்தது,'

என் கணவர் கழுத்தில் கட்டியது ஒரே முழக்கயிறுதான், ஆனால் அவர் இறந்ததும் 'அது பல மைல் நீளத்துக்கு என்னைச்சுற்றி முள்வேலி போட்டு விட்டது. என் பரிதாப நிலையைக் கண்டு பச்சாதாபப் பட்டனர் பலரும் இந்த என் நிலையைக்காண கொடுத்து வைக்காத என் தாய் என் கணவருக்கு முன்பே கைலாயம் போய் விட்டாள்.

என்னிடம் ஏராளமான பணம் இருந்தது—பெரிய வீடு இருந்தது, இவை என் கணவரால் எனக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்பு—இப்பொழுது வறுமை என்னை வாட்டவில்லை... வாலிப...உணர்ச்சிதான்......? என் இளமையும் எழிலும் அப்படியே இருந்தது.

இருண்ட இரவு நேரங்களில் கண்ணைச் சிமட்டிச் சிமட்டிச் காட்சியளிக்கும் அந்த நட்சத்திரங்களைக் காண்பேன்—காதல் மொழி பேசி அவை என் கருத்தைக் கலக்கும், ஆகாயத்தின் ஏதோ ஓர் இடத்திலிருந்தது.

அதற்குமேலே ஏதோ ஓர் உலகத்தில் என் கணவர் என் இளமையின் இன்பத்துடிப்பையும், அடிக்கடி என் மார்பகம் விம்மி விம்மி வீழ்வதையும். ஐயோ பாவம்! அவர் காண முடியுமா? இந்த உலகத்தில் என் அண்டையில் அமர்ந்து இருந்த அந்தக் காலத்திலேயே அவருக்குத் தெரியாத என் மார்பின் துடிப்பை இன்று எங்கே காணப்போகிறார், கண்டுதான் என்ன செய்யமுடியும், கையில் கனியிருக்கக் கடித்துண்ணத் தெரியாது கைநழுவி விட்ட கபோதிதானே......இன்னம் மேலே எங்கோ இருக்கும் இறைவன் அவர் அன்று எழுதிய என் தலை எழுத்தை இன்று மாற்றவா முடியும்—ஆனால் அவரை நான் பார்க்க வில்லை, ஆயினும் பரிந்து கேட்பேன்-பணிவுடன் வேண்டுவேன். இரவு இப்படியே கழியும்-கீழ்வானில் தோன்றும் இரவியைக் காண்பேன்-இருண்ட உலகத்துக்கு ஒளிதரும் இறைவா! என் இதய ஒளி மலருவது எப்பொழுதோ? கல்லைக்கண்டு கருத்தழியும் கபோதிகளும் உண்டு. ஆனால் நான் கல்லைக் கல்லாக எண்ணவில்லை. சகல புவனங்களையும் ஆக்கிப்படைத்து அழிக்கும் வல்லமை கொண்ட ஆண்டவனாகவே மதித்தேன். கண்ணீரினால் கழுவி—கருத்தைச் செலுத்திக் கதறுவேன்: என் மனதிலே தோன்றும் தெவிட்டாத-இன்பம் நிறைந்த-எண்ணங்களையெல்லாம் அடக்கி ஒடுக்கி-ஆண்டவன் சந்நிதியில் உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் விழுந்து கிடந்து வேண்டுவேன். அடுத்த பிறவியிலாவது அவர் மனம் இளகாதா என்று.

அன்று கோயிலிலிருந்து வெளியே வந்தேன். எதிர்ப்புறமுள்ள பரந்த இடத்தில் நிறைந்த கூட்டம். வெண்தாடிப் பெரியார் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். அமைதியின் மத்தியில் ஆணித்தரமான மேற்கோள்களுடன், கணீரென்ற குரலில்-கருத்து நிரம்பிய கர்ணாமிர்தமான உணர்ச்சிமிக்க ஊக்கந்தரும் சொற்களை உதிர்த்துக் கொண்டிருந்தார். என்னவென்று கவனித்தேன்......மனதின் மாசு மடிந்தது—என் அறிவுக் கண்ணைத் திறந்தார்...அந்தகாரமே நிரம்பியிருந்த என் அவல எண்ணங்கள் அகன்றன. புத்துணர்ச்சி பெற்றேன்:புதுமை எண்ணம் படைத்தேன்-என்வாழ்வைச் சிதைக்க இருந் தவன் நெஞ்சகக்கூட்டத்தையும்-வஞ்சக உலகத்தையும் வெறுத்தேன்.

புத்துலகச் சிற்பி-புதுமை வாழ்வின் புதல்வன். அஞ்சா நெஞ்சன்-அறிவின் ஜோதி-ஆஹா......அந்த மகான்-அவரின் ஆதரவாலும்-சீர்திருத்தச் செம்மல்களின் தியாகத்தினாலும்-பழமையின், உளுத்துப் புழுத்துப் போன-ஊழல் நிறைந்த அறிவுக்கு மாறான அவசியமற்ற சமூகக்கட்டுப்பாட்டைத் தகர்த்து-சிறந்த சீர்திருத்த வாழ்வு இணையும் துணையுமான இன்பவாழ்வு-புத்துணர்வு பெற்ற புனிதவாழ்வு அடைந்தேன்.

அன்பழகன் ...அவர்பெயர்...ஆம்... என் அன்பை எல்லாம் அள்ளிப் பருகி அணைந்து அன்புவார்த்தை சொல்லி ஆதரிக்கும் என் இன்ப புரி மணாளன்-என் கணவர்-என் இதய மன்னன். எண்ணும் போதே இதயம் பூரிக்கிறேன்- எங்கள் அன்பின் உருவம் எங்கள் முன் துள்ளி விளையாடி எம்மைப் பிணைக்கிறான். சமூகக் கட்டுப்பாட்டைத் தகர்த்து என் புது வாழ்வுக்குத் துணை நின்ற தியாகியின் செல்வக் குமரன் திராவிடமணி.

ஆம்...அன்று கண்ணீர் சிந்தினேன் என் வாழ்வின் நிலைகண்டு. இன்று கண்ணீர் சிந்துகிறேன்-கைம்மை நிறைந்த இளங் கன்னிகளின் நிலைகண்டு.

அன்று...ஆண்டவனைப் பிரார்த்தித்து அடுத்த பிறவியிலாவது வாழ்வை வேண்டினேன். இன்று...கண்மூடிப் பழக்கத்தை மண் மூடச் செய்து கருத்துக்கும் காலத்துக்கும் தக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

வணக்கம்

தங்கள் அன்புள்ள சகோதரி
"விமலா"

திருவள்ளுவரும் திருக்குறளும்

[கே. இராமையா இராயபுரம்]

தமிழ் நாடு செய்த தவப்பயனாய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோர்க்கு ஒழுக்க முறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்தாரொருவராக வைத்தெண்ணப்படுகின்றார். உலகம் போற்றும் பொது மறையில் ஆசிரியர் வகுத்துப் போந்த ஒழுக்க முறை இன்னார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுவதற்கு உரியதாயிருக்கின்றது. திருவள்ளுவர் தம் வாழ்க்கை அனுபவத்தையே "யாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம்" என்று சுரந்தெழும் அருள் மிகுதியினால் அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்க முறையினை வகுத்த காரணத்தால் இவரைத் தமிழ் நாட்டுச்சாக்ரடீஸ் என்றுகொள்வாரும் உண்டு.

தெய்வப்புலவர் அருளிய பொது மறை உலகத்தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றினும்தலைசிறந்து விளங்குகின்றது. உயரிய கொள்கைகளையும் எல்லோரும் ஒருங்கே ஏற்றுக்கொண்டு ஒழுகத்தக்க ஒழுக்க முறையையும் கொண்டுள்ள ஒரு நூல் உயர் தனிச் செம்மொழிகளுள் யாதாவதொன்றில் எழுதப்படினும் அஃது அனைவராலும் போற்றிப் படிக்கப் பட்டுப்பல் வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படும் சாதி, சமய, நிற வேற்றுமையின்றி சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக் கூறுகின்றது.

இல்லறம் நடத்தும் இயல்பும், தூய துறவற நெறியும், சமுதாய ஒழுக்க முறையும் அரசனும் அவன் அங்கங்களும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் முறைகளும், மனித வாழ்க்கையின் ஒப்பற்ற முழு இலட்சியமும் ஆசிரியர் தம் நூலிற் பொது நோக்கங் கொண்டே புகன்றியுள்ளார்.

இச்சீரிய நூல் எச்சாதியினருக்கும், எச்சமயத்தினருக்கும், பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும். சில நூல்கள் தாம் எழுந்த காலத்தில் வாழும் மக்களின் கருத்தைக்கவரும் பொருள் பற்றிக்கூறிச் செல்லும். அத்தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே அந்நூல்களும் படிப்பாரின்றி மறையும். ஏனெனில் பிற்காலத்தில் தோன்றுவோரின் கருத்துக்களும், இலட்சியங்களும் மாறி விடுகின்றன. ஆனால் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிவிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும் பிறவிப்பேறுகளாகிய அறம், பொருள். இன்பங்களையும் அவற்றின் மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து திருவள்ளுவர் செய்த நூல் எக்காலத்திலும் மாறாப்பயன் தரும் மாண்புடைய நூலாய் விளங்குகின்றது இதைக் "காலங்கடந்த நூல்" என்றே கூறலாம்.

திருக்குறள் சாதிப் பொது நூலாகவும் விளங்குகின்றது. நான்கு வருணம் என்ற சாதிப்பிரிவினைப் பரிமேலழகர் தம் உரையிற் புகுத்திப் பல இடங்களில் வலிந்து பொருள் கொள்ளினும் திருவள்ளுவர் நான்கு வருணங்களைப் பற்றியதால் அவை தமிழ் நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவை என்றதால் தம் நூலில் யாண்டும் கூறினாரில்லை. சமன் செய்து சீர்தூக்கும் கோல்போலவே நீதிகளை வகுத்து அனைவரையும் சமரசப்பார்வையால் பார்க்கின்றார் இந்நூலுக்கு எல்லோரும் உரியவர் இவ்வுண்மையை கீழ்கண்ட திருவள்ளுவமாலை வெண்பாக்கள் விளக்குகின்றன.

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர்
மொழிந்த பொய்யா மொழிக்கும்
பொருளொன்றே—செய்யா
அதற்குரியார் அந்தணரே ஆராயின்
ஏனை இதற்குரியரல்லாதார் இல்.
—வெள்ளி வீதியார்.

ஆற்றல் அழியுமென்றந்தணர்கள்
நான் மறையை போற்றியுரைத்தேட்
டின் புறத்தெழுதார் —எட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார்
முப்பாலைச்சொல்லிடினும் ஆற்றல்
சோர்வின்றி. —கோதமனார்.

கிருஸ்தவரும் வரவர இதன் பெருமை அறிய ஆரம்பித்தனர். தமிழ்க்கடலின் எல்லை கண்டவரும் திருக்குறளை ஆங்கிலச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்த வருமாகிய "போப்பாதிரியார்" எங்கள் ஏசுநாதர் மலைமேல் செய்த ஹிதோபதேசத்தின் எதிரொலி ஆகும் இத்திருக்குறள் என்பர்.

இவ்வாறு சமரச ஞானச் செல்வமாகிய இந் நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் மனமாற்ற மடைந்து தமக்கென வாழுச் சுயநலத்தினின்றும் மாறி ஒழுக்கமுடையவர்களாய்ப் பிறர்க்கென வாழ வேண்டுமென்ற எண்ணத்தோடு சமரசப் பார்வையைப் பெறுவரேல் நம் நாடு எவ்வளவு பயன் பெறும்! திருக்குறள் என்பது என்ன என்றும் திருவள்ளுவர் யார் என்றும் அறியாத தமிழ் மக்கள் பல்லாயிரவர் இந்நாளில் உளர் என்பது யாருமறிந்ததே. நம் தமிழ் மொழியில் பெறலரும் மணி போன்ற நூல்கள் இருப்பதையும் அறியாராய் அறியாமை இருளில் கிடந்து உழலும் நம் நாட்டு மக்களிடைக் கல்வியைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு உரிய நூல்களுட் சிறப்பாகத் திருக்குறளின் போதனையை எடுத்துக்கூற பல அபிமானிகள் முன்வருவரேல் நம் நாடு மிக விரைவில் முன்னேற்ற மடையும்.

மரணச்செய்தி

சென்னை 18-1-49

1939-ம் ஆண்டில், கட்டாய இந்தியை எதிர்த்து முதல் முதலில் தன் உயிரைப் பலித்தந்து தமிழர்களின் மானத்தைக் காத்த. வீர. எல். நடராசன் அவர்களின் தாயார் குப்பம்மாள் அவர்கள் 16-1-49. ஞாயிறு அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன் சே. தேவசகாயம்

செயலாளர்.

சென்னை எழுகிணறு திராவிடர் கழகம்.

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

—:(x):—

[முன்னவாரத் தொடர்ச்சி]

[“ பிவியார் ”]

தங்கம்மாள் குதித்தெழுந்து காமராமன் சென்ற கதவின் தாழ்ப்பாளை போட்டுவிட்டு, ‘கொஞ்சம் பொருங்கள் சிங்காரித்துக்கொண்டிருக்கிறேன் 5 நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்’ என்று முதலாளியைப் பார்த்து சொல்லிவிட்டு மளமளவென அண்டையிலிருந்த குளிப்பறைக்குள் சென்றாள். பத்துநிமிஷங்களுக்குள் குளித்து உடுத்தி சிங்காரித்துக்கொண்டு வந்து கதவின் தாழ்ப்பாளை நீக்கினாள். அவள் அறைக்குள் நுழைய முதலாளி எவ்வளவோ முயற்சித்தும் கதவு திறக்கமுடியாது போகவே, பித்துப்பிடித்த குரங்குபோல் கதவின் பக்கத்தில் உலாவிக்கொண்டிருந்தான். கதவுதிறந்தபோது, அவன்முகம் “ ஏமாற்றத்தாலும் கோபத்தாலும் கொதித்துக்கொண்டிருந்தது. அவன் சாதாரணமாக நடிகரை கேவலம் புழுக்களைப்போல் எண்ணி தயவுதாட்சண்யம் காட்டாது வாயிற்கு வந்தபடி வசைமாரி பொழிவது வழக்கம். யார்முதலில் வேலைதேடி வந்தாலும் முன்பின்யோசியாது தனது அதிகாரத்திமிரையும் நாற்ற வாயையும் காட்டிவிடுவது வழக்கம். இதற்குக்கூடியும் பணத்திமிரும் தான் காரணம். வயிற்றுக்கற்ற ஏழைகளே பிறரிடம். மானங்கெட்டு வேலை தேடிவருவது வழக்கமாகையால், வயிற்றுக் கொடுமைக்காக இந்தமானங்கெட்ட பேச்சுக்களையும் பொறுத்துக் கொள்வார்கள். முன்னிலையில் மறைவிடத்தில் பிறரிடம் பேசுகையில், அந்த மண்டை வீங்கிய முதலாளியை, ஆயிரம்பங்குக் கேவலமாகப்பேசி மனச்சந்திபெறுவது உலகம்கண்டதுதானே. தங்கம்மாளின் முகராசி விசேஷத்தாலோ; இந்த நல்லபுள்ளியை கைநழுவவிடலாகாது சிறுகச்சிறுகத்தான் இந்தக்கோட்டையைப் பிடிக்கமுடியும் என்று எண்ணமிட்டோ, முதலாளி முத்தண்ணா தன் கைவரிசையையும் அதிகார வெறியையும் இதுவரை காட்டவில்லை. கதவுக்கப்பால் நிற்கும்போது, ஏதோ பொறுமினான். கதவு திறக்கப்பட்டதும் அவனுடைய பொறுமலும் கொதிப்பும் காற்று திறந்துவிட்ட ஸ்டவ் அடுப்புச் சுடர்போல் புஸ் ஸென மறைந்துவிட்டன.

“ ஆஹா தங்கம் என்றால் உனக்கே பொறுத்தம். கச்சிதமான அலங்காரம். ரம்யமான மேக்கப்! உன்னை இப்போது பார்த்தால் சாமியார்கள் கூட சாமியார்களிக மாறிவிடுவார்கள். ஒவ்வொரு அம்சத்திலும் உன்புத்திசாலித்தனமும் திறமையும் பிரதிபலிக்கிறது, வந்துள்ள நான்கு புள்ளிகளும் பெருத்த கருப்புமார்க்கெட் பேர்வழிகள். லட்சம் லட்சமாகக் கொட்டி சேர்ந்திருக்கிறார்கள் உன் முழுத் திறமையையும் காட்டி குல்லாய் போட்டு அவர்களை ஒரே அமுக்காக அமுக்கி விடவேண்டும், என்ன? புத்திசாலி நீ உனக்கு நான் அதிகம்சொல்ல வேண்டியதில்லை ” என்று சொல்லியபடி அவள் கையைப்பிடித்து குதூகலத்தோடு குலுக்கி ஆசையோடு பார்த்தார். “ கொஞ்சம் இப்படி ஆடையை நெகிழ விடுங்கள். உங்கள் இயற்கையழகின் முழு ரம்யமும் அவர்கள் கண்களில் படவேண்டும் ” என்றுசொல்லி உடைகளைத் சரிப்படுத்தமுயற்சித்தார்.

தங்கம்மாள் உடல் மின்சார ஷாக் பட்டதுபோல் பற்றிற்று ஒதுங்கமுயற்சித்தும் பயனில்லை. மணந்த கணவனின் கைபட்டபோது இன்ப ஊற்றாக இருந்தது. இன்றோ மூன்றாம் மனிதனின் கைபட்டதும் தேள் கொட்டியதுபோன்று பதற்றத்தையும் திகிலையும் வெட்கத்தையும் அளித்தது. என்ன செய்வது? மேடையேறி விட்டால் மானத்திற்கும் வெட்கத்திற்கும் பயந்து முக்காடு போட்டுக்கொள்ள முடியுமா? வண்டியில் கட்டுப்பட்டுவிட்டால் சாட்டையடியையும் தார்முள் பாய்ச்சலையும் சகித்துக்கொண்டு ஓடித்தானே ஆக வேண்டும்? தங்கம்மாளின் மலர் கண்களிலே தண்ணீர் துளித்தது; கண்டதும் முதலாளி புத்தி தெளிந்து தனது கட்டு மீறிய உணர்ச்சியை எப்படி யோச்சாளித்துக் கொண்டு “மன்னிக்கவும். நான் தொட்டதற்காக வேறுவிதமாக நினைத்துக் கொள்ளலாகாது. வந்திருக்கும் ஆசாமிகள் கொஞ்சம் பித்தர்கள் அவர்களை எளிதில் மயக்க இதுதான் தகுந்த உபாயம். அவர்கள் போனபின்னர் நீ இரத்தனக் கம்பளத்தைக் கொண்டு வேண்டுமானாலும் உன் உடலைமூடிக் கொள்ளலாம். யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் தொழில் முறையில் செய்யவேண்டியதைச் செய்துதானே ஆகவேண்டும்? கண்ணைத் துடைத்துக் கொள். அனுபவமில்லாததால் கூச்சம் ஏற்படுவது இயற்கைதான் போனதுபோகட்டும். கண்ணீரைத் துடைத்துகொள். சிரிப்பை வரவழைத்துக்கொள். வாபோகலாம்” என்றி கூறி வழிகாட்டி அழைத்துச் சென்றான், சக்கரவர்த்தினியை தர்பார் மண்டபத்திற்கு அழைத்துச் செல்வதுபோல்? சீமான்கள் நால்வரும் சிகரட்புகை சூழ ஒய்யாரமாக அமர்ந்திருந்தனர் சோபாக்களில். அவர்கள் கைகளில் பானகலசங்கள் நடனமாடிக் கொண்டிருந்தன. அவர்களின் நிலைமையைக்கண்டதும் தங்கம்மாளின் உடலும் மனமும் பயங்கர இரத்தவெறி மிருகங்களைக் கண்டதுபோல் ஒடுங்கின. ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்ச்சியும் தடுமாற்றமுமடைந்தாள். தங்கமாளைக் கண்டதும் அந்த நால்வரும் துடித்தெழுந்து மரியாதையாக வந்தனம் சொல்லி வணங்கினர். தங்கம்மாளுக்கோ மறு வணக்கம் செய்யவும் உணர்ச்சியில்லை. அந் நான்கு சீமான்களோ, ரேஷன் காலத்தில் தட்டுத்தட்டாக உயர்தர பலகார பட்சணங்களும் அறுசுவை பதார்த்தங்களும் வட்டிக்கப்பட்ட அரும் விருந்தை பட்டினிகிடந்தவர் எப்படிப்பார்ப்பார்களோ, அதைவிட ஆயிரம் பங்கு ஆசையோடும் ஆர்வத்தோடும் பார்த்தனர்; தங்கம்மாளை, ஒருத்தரை ஒருத்தர் ஜாடையாகப்பார்த்து கண் சிமிட்டிக்கொண்டனர். சந்தோஷம் பொங்கமுத்தண்ணாவும்அதேசமயத்தில் ஒப்பந்தப்பத்திரங்களை நீட்டினார். கைமுத்திட்டனர். தேவையான தொகைக்குச் செக்குகளும் முத்தண்ணாவின் கைக்கு மாறின. ஆள்கள் ஐவரும் இரகசிய மொழியிலே தாழ்ந்த குரலிலே ஏதோ பேசிக்கொண்டனர். சீமான்கள் வாயிலிருந்து கிளம்பிய சொற்களைக் கேட்டதும் தஙகம்மாளின் மனம் அதற்குமேல் அவளால் சமாளித்துக்கொண்டிருக்கவியலவில்லை புலன் தடுமாறிய நிலைமையில் நாற்காலியில் சாய்ந்தபடி யிருந்தாள். அந்த நால்வரும் அவள் கையைப்பிடித்துக் குலுக்கி விடை பெற்றுச்சென்றதைக் கூட அவளால் உணர வியலவில்லை.

6 அத்தியாயம்

மிஸ். தங்கம் தலையணைகளை அணைத்தபடி படுக்கையிலே விழுந்து புறண்டு கொண்டிருந்தாள், நள்ளிரவுக்கு மேலாகியும் தூக்கம் வராமல் அவள் கண்களில் கண்ணீர், அதிகாலையில் சென்னை நகரத் தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் வருவதுபோல் விரைந்து வடிந்து கொண்டிருந்தது “ ஆண்டவனே? போதும் போதும் இந்த பெண்பிறவியெடுத்து நான் படும்பாடு! பெண்புத்தி அவசரப்புத்தி என்பது சரியாகத்தானாயிற்று. ஆசையோடு மணந்த கணவன் என்னை, ஆசைக்கிளியாக்கிக் கூண்டிலே அடைத்து வைத்து கண்ணான கண்ணாட்டியாக்கினார். அன்பு மொழிந்து வந்தார். அந்தச் சிறைஅப்போதுஎனக்குஏனோ கசந்தது வெறுப்படைந்தேன். அந்த வெறுப்பு தவறு என்றும் அவர் வைத்த சிறைவாசம்தான் பொறுத்தமானது என்றும் இப்போதல்லவா டலனாகிறது! ஆமாம். இந்த வெறியர்களிடமிருந்து என்னைப் பாதுகாக்கும் நல்லெண்ணத்தோடு தானே அவர் என்னை, அந்த அன்புச் சிறையிலே அடைத்துவைத்தார். அந்த அன்புக் கட்டுப்பாட்டை நான் ஏனோ தவறாக எண்ணினேன். அவருடைய கண்டிப்புகளும் கட்டுப்பாடுகளும் என் சொந்த நன்மைக்குத்தான் என்று என் கட்டைப்புத்திக்கு எட்டவில்லையே! அன்புக் கரத்தால் பட்ட அடிகள் ஆசையின் பரிசு என அப்போது உணர முடியவில்லை. பெண் பிறவிக்கு ஏற்பட்ட அந்த அசட்டுப் பொறாமையால் அவர் போக்கைத் தவறாக நினைத்தேன். காதலிலே அவருடைய அவர் கடுஞ்சொற்களைச் சகிக்க மறுத்த அதே உள்ளம் இப்போது காமாந்தகாரர்களின் வசை மாரிகளைச் சகிக்கவேண்டியிருக்கிறதே! அன்பு அணைப்பில் விம்மிதம் கொண்ட இந்த உடல் இப்போது மோகப் பித்தர்களின் கையில் குரங்கு கைப் பூமாலைபோல் கசக்கிப் பிழியப்படுகிறதே அன்பு ஸ்பரிசத்தால் அலர்ந்த இந்தக் கன்னங்கள், இப்போது, மேக்கப் பேய்களின் கைகளால், ரொட்டிமாவுபோல் பிசையப் படுகின்றனவே! ஆசைக் கண்ணாளர் அணைந்த உடலை மேகநோய் நானும் நடிகர்கள் தொடவேண்டியதாயிற்றே! ஐயோ இனிமேல் நானும் ஓர் பெண் பிள்ளை ; குடும்ப விளக்கு. என்று கூறிக் கொண்டு வெட்கம் மானமில்லாது எப்படி? உலகத்திலே முகத்தைக் காட்டுவேன்? ரேஷன் காலத்தில் காப்பிக்கிளப் வரும்படிபோல் ஆறாக வந்து குவியும் இந்தப் பணமும் புகழும் கெட்டுப்போன ஒழுக்கத்தைச் சரிகட்டுமா! அழிந்த கற்பை அலசி சுத்தப் படுத்துமா? ஆண்கள் பத்தாயிரம் பெண்களுடன் வாழ்ந்தாலும் அவர்களை இந்த உலகம் பத்தினிகளென்று ஒப்புக் கொள்ளும். சமுதாயத்திலே சாதியிலே சபையிலே அவர்களுடைய மதிப்பு குறைவதற்குப் பதிலாக உயரும் ஆனால் பெண்! ஒருமுறை கெட்டால் கெட்டது தான். நேர்மையாளர் விரும்பத்தகாத கஞ்சாமடம் என்று கருதி ஒதுக்கப்பட்டு விடுவார்களே. ஆண்களை பழுதுபடாத பொன் பாண்டங்களாகக் கருதுகிறது வைதீக உலகம். பெண்களையோ பிறர் தொட்டால் தீட்டுப் பட்டுவிடும் மண்சட்டிகளாகக் கருதுகிறது; கருதி தீட்டுப்பட்ட சட்டிகளை தூர ஒதுக்கித் தள்ளுகிறது. கள் மொந்தைகள் எனக் கருதி குப்பையிலே விட்டெறிகின்றது; காமவெறியர்களின் கைப்பாண்டமாகிக் கெடும்படி யெரிய இந்த ஓரவஞ்சக உலகம் இனி என்னை எற்றுக்கொள்ளுமா? ஐயோ பணப்பேய் பிடித்து அழிந்தேன் அழிந்தேன், அழுகல் நோய் என்னைப் பற்றிக் கொண்டது. (தொடரும்)

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

சாந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

எல்லா ஊர்களிலும் கிடைக்கும்;

காரியாலயம்.

33, திருவேங்கிட முதலித் தெரு, பெரியமெட்டு. சென்னை. 3.

டெலிபோன் : 86729.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganathan, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Mg. Editor R. Rajagopal.
Printed by J. A. SILVA, at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.